எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று கொட்டுமுரசே!

கோவைமுரசு

கோவைமுரசு, வெளியீடு: ஆசிரியை S.P.மீனாட்சி அம்மாள்...

பெரியார் ஈ. வே. ரா. வாழ்க.

வயதில் அறிவில் முதியோர் நாட்டின்
வாய்மைப் போருக் கென்றும் இளையார்
உயர் எண் ணங்கள் மலரும் சோலை.

— பாரதிதாசன்.

தழ் 5 | மே '48 | விலை அணா 4

திரையுலகில் புதுமை!
எங்கும் அமோக வரவேற்பு!
செவிக் கினிய கானம்!
சிந்தனைக் குரிய வசனம்!
கண் கவர் காட்சி ஜோடனைகள்!

சிட்டாடலின்

"ஞான சவுந்தரி"

T. R. மகாலிங்கம், M. V. ராஜம்மா

நடித்தது.

11-6-48 முதல்

வெற்றிகரமான 4-வது வாரம்

கோவை

லைட்ஹவுஸ் & எடிசன்சில்

கோவை, நீலகிரி ஜில்லா உரிமை:—

தி ராஜா பிலிம் சர்க்யூட், Ltd.,

பொள்ளாச்சி.

கைத்தொழிற் கல்வி

பொருட் காட்சி

15–6–1948 முதல் 30–6–48 வரையில் கோயமுத்தூர் அவனுசி ரோட்டிலுள்ள "கோபால் பாக்"கில் நடைபெறும்.

இந்தப் பொருட்காட்சி பொதுமக்களுக்கு, சிறப்பாக கைத்தொழில், என்ஜினீரிங் ஆகியவைகளில் அக்கரையுள்ள மாணவர்களுக்கு, கைத்தொழிலைப் பற்றித் தத்ரூபமாக விளக்கிக் காட்டுவதாகும். கைத்தொழில் அபிவிருத்திக்கான மார்க்கங்களையும், பல்வேறு துறைகளிலுள்ள குறைபாடுகளையும் தெரிந்து கொள்ள சர்க்காருக்கும் இது ஓர் நல்ல சந்தர்ப்பமாகும்.

யு. எம். எஸ் மார்க் சம்பந்தப்பட்ட இயந்திரங்கள் அல்லது பொருள்கள் அல்லாத வெளிப்பொருள்கள் எதுவும் பொருட்காட்சியில் அநுமதிக்கப்படமாட்டா.

இத்தகைய பொருட்காட்சி ஒன்றை மறுமுறை நடத்தும் சந்தர்ப்பம் வாய்க்காமலும் போகலாம். அவசியமானுல் இந்தப் பொருட்காட்சியே மேலும் ஓரிரு வாரங்களுக்கு நீடிக்கப்படலாம். கைத்தொழில், என்ஜினீரிங், சுகாதாரம் ஆகியவைகள் பற்றிய நிபுணர்களின் பிரசங்கங்கள் நடைபெறும். கல்வி சம்பந்தப்பட்ட சினிமா படங்களும் காண்பிக்கப்படும். எனவே இத்தகைய மிக அருமையான சந்தர்ப்பத்தை இழந்துவிடாதீர்கள்.

தேதிகளையும், விதிகளையும் மாற்றும் உரிமை எங்களுக்குண்டு.

ஜி. டி. நாயுடு,

தலைவர், தி இண்டஸ்ட்ரியல் லேபர் வெல்பேர் அசோசியேஷன் லிமிடெட்,

அவனுசி ரோட், கோயமுத்தூர்.

தந்தி: 'வசந்தா' கோயமுத்தூர். போன்: நெ 25

வசந்தா மில்ஸ்

லிமிடெட்.

ரிஜிஸ்டர் ஆபீஸ் : சிங்காநல்லூர்.

மேனேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு செக்ரடரீஸ்;

R. K. ஷண்முகம் செட்டி & பிரதர்ஸ்

1934-ஆம் கள்ளிக்கோட்டையில் நடந்த கண்காட்சியில் நூல் ரகங்களுக்காக தங்கமெடல் நற்சாட்சி பத்திரம் பெற்றிருக்கிறோம்.

நூற்றல் :

20 நெ. முதல் 44 நெ. வரை ஒத்தை முறுக்கு, காரம், சலவை நூல் தயாரிக்கிறோம்.

எல்லாவிதமான ஜவுளி ரகங்களுக்கும்,

வேஷ்டிகள், லாங்கிளாத், டவல், சர்டிங், மல், சதர் தயாரிக்கிறோம்.

எங்களுடைய வி. 116 நெ. லாங்கிளாத் மார்க்கெட்டில் பேர் பெற்றது 600 நெ. காடா தயாரிக்கும் உரிமை எங்களுடையதே.

போலிகளைக் கண்டு ஏமாறுதீர்கள்.

நம் நாட்டுத் தொழிலை ஆதரியுங்கள்

போன் : 70 தந்தி : "ஸபின்னிங்"

ஸ்பின்னிங் அண்டு வீவிங் கம்பெனி லிமிடெட், கோயமுத்தூர்.

மூலதனம் ரூ 14,00 000
வசூலான தொகை ரூ. 6,92,300

டைரக்டர்கள் :

ஸ்ரீ வி. கோபால் நாயுடு
,, G. புருஷோத்தம நாயுடு
,, A. துரைசாமி நாயுடு
,, ஏ. வி. ஸ்ரீனிவாசலு நாயுடு
,, சி. ஆர். சதாசிவம்
,, ஆர். வி. லட்சுமைய நாயுடு

கதிர்கள் 45,000 **தறிகள் : 280**

நூல் : 60 ௳. வரை எல்லாவிதமான நூல்களும், பனியன் காரிகம், சலவை முதலிய எல்லா விதமான நூலும் கிடைக்கும்.

நெசவு : எல்லாவித ஜவுளிகள், உயர்ந்த ஷர்ட்டிங், லாங்லாத், கதர் துவாலைகள், வேஷ்டிகள் முதலியவை தயாரிக்கப்படுகின்றன.

சுதேச மூலதனம் தேசீயத் தொழில்
தேசீய நிர்வாகம்

Agents & Secretaries :

V. GOPAL NAIDU,
COIMBATORE.

ஜெய்ஹிந்த்!

ஸி ஆர், ஆர், இங்கிலீஷ் பிரிபரேடரி ஸ்கூல்

ராஜவீதி, கோயமுத்தூர்.

சகோதர சகோதரிகளே!

நம் பாரத மக்களின் கல்வியின் முன்னேற்றத்திற்காக அல்லும் பகலும் உழைக்க சித்தமாயிருக்கிரோம்.

தமிழில் தேர்ச்சியுள்ள ஆண்–பெண் குழந்தைகளை ஒரே வருஷத்தில் ஹிந்தி, தமிழ், கணக்கு, இங்கிலீஷ், சரித்திரம் முதலிய பாடங்களை கற்பித்து (III Form) 8-ம் வகுப்பு வரையில் ஹைஸ்கூலில் ஒவ்வொரு வருஷமும் சேர்த்து வருகிரோம்.

ஆண்–பெண் குழந்தைகளுக்கு திறமைவாய்ந்த உபாத்தினிகளைக் கொண்டு குறைந்த காலத்தில் நிறைந்த கல்வி கற்பித்து வருகிரோம்.

N. B:- எழுதப்படிக்கத் தெரியாத பெண்களுக்கு உபாத்தினிகளைக்கொண்டு, ஸ்பெஷலாக கவனித்து குறைந்த காலத்தில் நிறைந்த கல்வியை போதிக்கப்படும்.

இதர பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் மாணவ, மாணவிகளுக்கும் (8-வது வகுப்பு பரிட்சை) எஸ்.எஸ். எல் ஸி. பரீட்சைக்கு செல்லும் மாணவர்களுக்கும் ஸ்பெஷலாக பிரைவேட் டியூஷன் (Private Tuition) இரவு பாடசாலையிலும், விடுமுறை நாட்களிலும் கற்பிக்கப்படும்,

வெளியூர் குழந்தைகளுக்கு (ஹாஸ்டல்) இடம், ஆகாரம் வசதிகள் செய்திருக்கிரோம்.

மற்ற விபரங்களுக்கு நேரில் காண்க.

C. R. R. SWAMY,
Mg. Proprietor.

ஸ்டுடியோ மெஜஸ்டிக்

வெறைட்டி ஹாலுக்கு எதிர் மேல் மாடியில் உள்ளது.

கண்ணைக் கவரும் வனப்பும், உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் உணர்ச்சி மேலோங்கும் அழகிய வேலைப்பாடுடன் உன்னதமான முறையில் போட்டோக்கள் எடுத்து சுத்தமாகவும், தெளிவாகவும் குறைந்த விலையில் குறித்த காலத்தில் தருகிரோம். ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

ஸ்டுடியோ மெஜஸ்டிக்,
வெறைட்டி ஹால் வீதி,
கோயமுத்தூர்.



R. K. இராமகிருஷ்ணையா M. L. C.,

மானேஜிங் ஏஜெண்ட்.

ஸ்ரீ பாலமலை ரங்கநாதர் மில்ஸ்.

பெரியநாயக்கன் பாளையம்

அன்பார்ந்த ஸ்ரீ மாணிக்கம் அவர்கட்கு.

நமஸ்காரம். தங்களுடைய பத்திரிகை 'கோவை முரசு' வரப்பெற்றேன். தங்கள் தமிழ் முன்னேற்றத் தொண்டில் ஈடுபட்டிருப்பதற்கு மிகவும் மகிழ்கின்றேன். இப்பத்திரிகையின் மூலம் தாங்கள் தமிழின் முன்னேற்றத்தையும் சமூக முன்னேற்றத்தையும் செய்ய ஆண்டவன் அருள்புரிவாராக.

அன்புள்ள,

இராமகிருஷ்ணய்யா.



R. K. கந்தசாமி, B. A. B. Sc. Tecc. A. M. C. T.
"பிருந்தாவனம்"
திருச்சி ரோடு, கோவை.

அன்பார்ந்த ஐயா!

தாங்கள் 'கோவை முரசு' என்னும் பத்திரிக்கை நடத்துவதைக்கண்டு களிப்புறுகிறேன். பொதுவாக தமிழகத்திற்கும் சிறப்பாக கோவை மாவட்டத்திற்கும் பெரிதும் பயனளிக்குமென நம்புகிறேன். இந்த சஞ்சிகை பத்திரீகை தர்மத்திற்கு மேன்மையை எடுத்துக்காட்ட எல்லா வழிகளையும் பின்பற்றி வெற்றி யெய்துமென நம்பும்,

தங்களுண்மையுள்ள,
R. K. கந்தசாமி.



உயர்திருவாளர் C. கிருஷ்ணன் அவர்கள்

கோவை

C. S. & W. மில்ஸின் நிர்வாகி. பஞ்சாலைத் தொழில் நிபுணர். இத்துறையை அறிய மேனாடு சென்று விஞ்ஞான ரீதியில் கலை நுணுக்கம் பெற்றவர். பெரு நிலக் கிழவராயினும் பிறர் பொருட்டு வாழும் தகமை யாளர். பொதுப்பணியிலீடுபட்டு உழைக்கும் ஆர்வ முடையார். இன்சொல் இதமார் இளகிய நெஞ்ச முடையார் C.S & W. மில்லின் முன்னேற்றத்தின் காரண கர்த்தர் இவரே. தொழிலாளருக்கு வேண்டிய வசதிகளை தந்துதவியவர். சுதந்திரத் தமிழகத்தில் கோவை மான்செஸ்டராக இருப்பதற்கு மாறாக மான்செஸ்டர் கோவையைப் போலிருக்க வேண்டு மென விழைவார்களுக்கு இவர் போன்ற பல கிருஷ் ணன்கள் உதிக்கவேண்டும்; செயலாற்ற வேண்டும்.



அறிஞர் K. M. பாலசுப்பிரமண்யம் B. A. B. L.

ஸ்ரீமதி மீனாக்ஷியம்மையவர்களால் வெளியிடப்பட்டுவரும் "கோவை முரசு" என்னும் பத்திரிகை வரப்பெற்றேன். சீரிய கருத்துக்களும் சிறந்த உணர்ச்சிகளும் காரியர் முன்னேற்ற முதல் நால் வகை நலன்களுக்கும் உழைக்கும் நன் முயற்சியும் செறிந்த கட்டுரைகளைக் கொண்டு நாட்டில் நடமாடி நம் வீட்டில் விருந்தளித்து வரும் இத்தாள் நாடோறும் வளர்ந்து ஏழைகளுக்கும் எளியவர்க்கு மட்டுமேயன்றி எல்லாவிதக் கலைகளுக்கும் பாடுபடும் என்று எதிர் பார்ப்பதுடன் இவ்வாசியர்க்கு இறைவன் திருவருளும் பாலிக்க என்று வாழ்த்துகிறேன்.

வெண்பா

பாவை யரசி பண்புடைமீ னாக்ஷிதநம்
கோவை முரசுதனைக் கொட்டி — யாவருமே
நாடு செழிக்கவென நாடோறுமே கூறிப்
பாடுதும் நாம் வாரீர் இப் பார்.

திருவாசகம் கே. எம். பாலசுப்பிரமணியம்,

கோவை

முரசு

மலர் 1	மே 48	3, 4 இதழ் 5.

பெரியார் காந்தியார்.

):o:(

மனிதர்கள் தோன்றுவதும், மனிதர்கள் மறைவதும் உலக இயற்கை. அதை ஒளித்தல் என்பது முடியாத காரியம். தோன்றி மறையும் மனித மலர்கள் பயனற்ற காளான்களாக கலைந்திருந்தால் அவை கருதி அழுவாரில்லை. தென்றல் பாயும்பொழுது தேனையும் சுகந்தத்தையும் அள்ளி இறைக்கும் மலர் கூட்டத்தை ஆடுமேய சம்மதிப்பாருண்டா? அதுபோல் பெரியார் காந்தி பிறப்புடையவராகையால் இன்றில்லாவிடினும் ஒருநாள் இறக்கவேண்டியவர்தான், ஆனால் சாகடிக்கப்படுபவராக சாத்வீகப் பெரியாரானாரே என்பதை எண்ணும் உள்ளம் உலையாக மாறி தகிக்கின்றதே.

தோழர் காந்தியை பெரியார் காந்தி என நாம் அழைப்பதற்கும், நாட்டு மக்கள் அவர்பால் அன்பு செலுத்தியதற்கும் காரணம், பலர் செய்ய முடியாத சில சீரிய செய்கைகளை நடைமுறையில் காட்டியதால்தான்.

அன்புடைமையால் வாழ்ந்த பெரியாரை மதவுடைமையின் பேரால் மாள அடித்துவிட்டார்கள். மதம் மண்டலங்களுக்கு மட்டும் தீங்கு தருவதல்ல; மகான்களுக்கு தீமை தருவதில் தன்னேரற்றது என்பதைக் கண்டோம்.

மதாபிமானம் படித்த அறிஞனைக்கூட மனிதாபிமானத்தை மறக்கடிக்கச் செய்கிறது. மனிதாபிமானத்திற்குப் புறம்பான மத வெறியர்கள்; அவர்கள் நிறைந்த ஸ்தாபனங்

கள் — அடியோடு அழிக்கப்படாத வரையில் தார்மீக உணர்ச்சி தரணியில் வேரூன்றாது.

பெரியார் காந்தி நாமம் வாழ்க!

அகநட்புடையன்பர் பிரிவு.

பொள்ளாச்சி திராவிடர் கழக முன்னாள் தலைவரும் பெரு நிலக்கிழவருமான திரு. பி கே. கிருஷ்ணசாமி அவர்களின் மருகர் தனக்கென வாழா பிறர்க்குரியாளர், அறிவியக்க அன்பர். அந்தமிழின்பம் ஆர்வுரப்பொழியும் செந்தமிழன்னையின் நந்தாவிளக்கனைய செல்வர், நமதாருயிரனைய நண்பர் சூலூர் வாழ் பெருமக்களின் பெறற்கரிய பெம்மான் உயர் திரு S. M. திருமூர்த்தியவர்கள் 23-3-48 எதிர்பாராது இயற்கையெய்தியது குறித்து எமது இதயப் பூர்வமான அநுதாபத்தை அன்னார் குடும்பத்தாருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பாராட்டுகிறோம்.

அறிஞர் T. R. சுந்திரம் பிள்ளை, B.A., B L.

கோவை பிரபல வழக்கறிஞர், பன்னூல் புலவர், ஏழைகளின் தோழர், இன்ன பல துறைகளிலும் ஈடுபட்டுள்ள அறிஞர், நமது "முரசி"ன் முழக்கத்திற்கு முதுகெலும்பு போன்றவர். கோவை உயர்திரு டி. ஆர். சுந்திரனார் B. A.. B. L., அவர்கள் கோவை சர்க்கார் உதவி பப்ளிக் பிராஸிகியூடராக (Add. Public prosicutor) நியமனமாகியிருப்பது கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறோம். நெருக்கடியான காலத்தில் உதவியவர்களையெல்லாம் கைவிடுவது சர்க்காரின் கொள்கை. ஆனால் திரு சுந்தரனார் விஷயத்தில் நேர்மையாய் நடந்து கொண்டது பாராட்டத்தக்கது.

பத்தாண்டுகளுக்கு முன்பே இவ்வுயரிய பதவிகளை அவர் அநுபவித்திருக்க வேண்டும் அவ்வளவு சீரிய பண்பு வாய்ந்தவர். இருப்பினும் அவர் இன்று அடைந்துள்ள உயர் நிலைக்காக எமது இதயம் கனிந்த வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

வீறு பெற்று நில்லடா!!

★

வீறு பெற்று நில்லடா!
விதியை மீறிச் செல்லடா!

ஊறும் வீர சக்தியால்
உலகை முற்றும் வெல்லடா!

உச்ச மான வானிலே
உலாவுங் காற்றை போலவே

அச்சமற் றுலாவு வோம்
அமுத வெண் ணிலாவிலே!

பனிமலர் துலுங் கிடும்
பவளக் காலை போலவே

கனி முறுவல் பூத்துநம்
கடமை செய்ய முந்துவோம்

திரு உடன் உலகெலாம்
செழித் திடப் பவனிசெல்

பருவ காலம் போலவே
பயன் பழுக்க வாழுவோம்!

பண மலர்கள் சூட்டியே
பரமனைக் கலந்து நாம்

கண்மலரிலே மணக்
கருணை பொங்க வாழுவோம்.

— சுத்தானந்த பாரதி.

மகாத்மா காந்தி : :

: : இரங்கற்பாக்கள்.

அறிஞர், கே எம். பாலசுப்ரமண்யம் B. A., B. L.,

முடியணிந்த வேந்தர்களும் முனிவரென மொழியவரும் முதியர்தாமும்
துடியணிந்த இடையினரும் தொழிலணிந்த தோழர்களும் துயரம்சார்ந்து
மிடியடைந்திப் படியடைந்த கதிநினைந்து வெதும்பியுளம் மிகவும்வாட
தொடிவிடையில் எமதரிய காந்திமகான் விண்ணுலகம் நோக்கினாரே. 1

மண்ணுலகில் அமைதிதனை மகிழ்வுடனே நிறுவுதல்செய் மகிமையாளர்
எண்ணரிய எங்கள் பிரான் காந்திமகான் எமைவிடுத்தது ஏதோ என்றேன்
விண்ணுலகர் மிகத்தமக்குள் வெகுண்டுசமர் விளைத்திடுதல் களையவேண்டி
அண்ணலவர் தமைஇறைவன் அழைத்தனன் என்று அசரீரி அறைந்ததாலோ

முந்தியநாள் உலகிழைத்த தவத்தினுடன் இனியும் எதிர் முனைந்துதோன்றும்
பிந்தியநாள் வரும்பெருமை திரண்டுஉருப் பெற்றதுபோல் பிரங்கிவாழ்ந்த
எந்தைபிரான் எழில்காந்தி இனியமகான் எமைவிடித்தின் றேகினாரால்
இந்தியவான் உயர்காந்தி மதியழிந்துப் இருள்சூழ்ந்திட் டேங்குதம்மா. 3

உள்ளமதிற் பொய்யறியா தொழுகுகின்ற உத்தமர்தாம் உலகத்துள்ளார்
உள்ளமதில் தெய்வமென உயர்ந்திருப்பர் எனவுரைத்த உயர்ந்தனார்ன
வள்ளுவனார் மொழிலாழ வையமதில் வாழ்வாங்கு வாழ்ந்த எங்கள்
வள்ளல்மகான் காந்தியவர் வானுரையும் தெய்வமென மாறினார்காண். 4

மகாத்மா காந்தியடிகள் மாய்ந்தார்; மண்ணுலகில் மதிய ழுகர் சாய்ந்தார். கனவிலும் நாம் காண மறுத்ததை நம் நனவிலேயே காணும் பாவிகளானோம். எண்ணுதற்கும் நடுங்கிய செயலை நம் எதிரிலேயே காணும் ஏழைகளானோம். சாந்த குணசீலர், சத்வகுண சன்மார்க்கர். சத்தியத்தின் அவதாரம் இன்று நித்தியத்தை சார்ந்துவிட்டார். சமத்துவத்தின் அஸ்திவாரம், சகோதரத்வத்தின் சிகரம் குணம் என்னும் குன்றேறி நின்றவர் மகாத்மா, அவர் புகழ் மணம் என்பதை உலக முழுவதிலும் பரப்பினவர். சாந்தத்தை நிலவுதற்கென அவதரித்த நம் காந்தி மகான் ஒரு காந்தத்தைப்போல நின்று பலரது இருப்பு உள்ளங்களையும் தன் வயம் திருப்பி இழுத்தார்.

கூறலாம். காந்தியடிகளைப்போல் வேறெந்த உலகப் பெரியாரும் தமது வாழ்நாட்களிலேயே கோடிக்கணக் கணக்கான மக்களால் குரு எனவும் தெய்வம் எனவும் தமது உருவின் மூலம் பூஜிக்கப்பட்டிலர். மற்றும், வேறெந்த உலகப் பெரியார் இறந்து பட்ட பின்னரும் அச் செய்தியைச் செவியில் ஏற்றவுடனே பிறர் எவ ரும் திடீரென்று தாமும் இறந்திலர். ஆனால், இன்று நம் மகாத்மாவின் மரண விஷயத்திலோ சரித்திரத்தி லும் புராணத்திலும் கண்டும் கேட் டும் இராத அற்புத விளைவுகளைக் கண்டு வருகிறோம். மகாத்மா இறந் தார் என்ற செய்தியைக் கேட்டார் மீரத்தில் உள்ள ஒரு வீரத் தியாகி. அவரது உடல் சாய்ந்தது. அதே விநாடி உயிரும் மாய்ந்தது. தர்ம வீரர் என்ற தக்கநாமத்தை அவருக் குச் சூட்டிய அவரது தாய் தந்தை யரை வாழ்த்துவோம். ஜாம்ஷெட் பூரில் செய்தியைக் கேட்டதும் இடி யால் தாக்குண்ட ஏறெனச் சாய்ந்து மாண்டனர் ஏனையதொரு தொழி லாளர். முசபர்ப்பூரில் உள்ள முஸ் லீம் நண்பர் ஒருவர் இவர்களோடு போட்டியிடுவதைப்போல மகாத்மா வின் மரணச் செய்தியைக் கேட்ட வுடன் மூர்ச்சையாகி மாண்டார். அவர் பெயர் இஸ்மெயில். இந்து முஸ்லீம் ஒற்றுமைக் காட்சி இருந்த அற்புதந்தான் என்னே! பிட்டுக்கு மண் சுமந்த சிவபெருமான் பாண்டி யன் பிரம்பால் அடிபட்டுக் கிடந்த போது அந்தப் பிரம்படி அச்சிவன் மீது மட்டும் படவில்லை. மற்ற ஜீவராசிகள் யாவுமே பட்டுத் தவித் தன அப் பிரம்படியால் என்பதைப் பழம் புராணம் என்பார்க்கு இது ஒரு பதில்போலும். இன்று கொல் லப்பட்டவர் காந்தியடிகள் மட்டு மல்ல. இந்தியர்கள் என்று சொல் லப்பட்ட அனைவருமே பல்வேறு வகைகளில் கொல்லப்பட்டுள்ளார் என்பதை நம் கண்முன்பாக ஐய மறக் காண்கின்றோம். காந்தி இருந் து யார் வீழ்ந்தார். காந்தி இறந்து யார் வாழ்ந்தார்?

அஹிம்ஸையே உருவாயமைந்த கருணாநிதிக் கடலாகிய மகாத்மா காந்தியடிகளின் உயரிய உயிர் கடைசியாக ஹிம்சையின் மூலமாக வா இவ்வுலகை விட்டகலவேண்டும்? அப்படியானால் வென்றது ஹிம்சை யா அல்லது அஹிம்சையா? என்று பலர் திகைக்கின்றனர் ஆனால் சற்று உற்று நோக்கின் உண்மை புலனா கும். பெரிய புராணத்திலுள்ள மெய்ப்பொருள் நாயனாரின் கதையே மகாத்மாவின் விஷயத்திலும் மீண் டும் நடிக்கப்பட்டுள்ளது என்று மிகத் தெளிவாகக் காணக்கிடக்கின் றது. மெய்ப்பொருள் நாயனாரைக் கொல்லும்பொருட்டு முத்தநாதன் என்ற மூர்க்கன் அடியார் வேடம் பூண்டு அரசனிடம் சென்றான். அர சன் அவனை உண்மை அடியார் என்று நினைந்து வணங்கியபோதே அருகில் இருந்த அக் கயவன் அம் மன்னனைத் தன் கத்தியால் குத்தி விட்டான். குத்தப்பட்டு வீழ்ந்த மன் னன் தனது லக்ஷியமே வென்றது என்று மாண்டார்.

இதைச் சேக்கிழார்,

கைத்தலத்திருந்த வஞ்சக் கவளிகை மடிமேல் வைத்துப்
புத்தகம் அவிழ்ப்பான் போன்று புரிந்தவர் வணங்கும் போதில்
பத்திரம் வாங்கித்தான்முன் நினைத்த அப்பரிசே செய்ய
மெய்த்தவ வேடமே மெய்யப்பொருள் எனத் தொழுது வென்றார்

வெட்டப்படுட்டு வீழ்ந்த மெய்ப் பொருள் நாயனார்தான் வென்றார் என்கிறார் சேக்கிழார். அதேபோன் றுதான் இங்கும் ஒருவன் சுட்டுக் கொன்றதும் இறந்த காந்தியடிகளே வென்றார். ஏனெனில், சுட்டவன் முதலில் நண்பனைப்போல் வந்து நயவஞ்சகமாய்க் காந்தியடிகளை

கொசுவையும் கொல்லத் துணியாத குணக்குன்றத்தையும் கொடியவன் ஒருவன் கொலை செய்யத் துணிந்து விட்டானே? ஏ, மனிதனே! உனது குரூர குணத்திற்குத்தான் ஓர் எல்லை இல்லையா? பசி தீர உணவளித்த பரமாத்மாவின் பஞ்சுபோன்ற கரத்தைப் பற்களால் கடித்துப் பாவியாவதா? சாகரதீசர் சாவதற்கு விஷமிட்டவனும் மனிதனே, ஏசுநாதர் இறக்குமாறு சிறையிலடித்தவனும் மனிதனே, இணையற்ற ஏப்ரஹாம் லிங்கனை இம்மிப் பொழுதில் சுட்டவனும் அவனே, மகாத்மாவின் மார்பிலே மனந்துணிந்து சுட்டவனும் அவனே. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்தும் மனிதனின் ஆன்மா அடைந்த முன்னேற்றம் இதுதானா?

நேற்றையதினம்வரை நிமிர்ந்து நின்ற ஆலமரம், நினைத்தற்கரிய கோடிக்கணக்கான நீள்படைகளும் ஆள் மன்னர்களும் தவித்த காலத்தில் தங்குதற்குத் தஞ்சமும் நிழலும் தந்துதவிய தனிப்பெரும் தயாமூல தன்மம் வாய்ந்த கற்பகத் தரு, இன்று அடியற்றுச் சாய்ந்து வீழ்ந்துவிட்டதே. உண்ண உணவும் உறையஇடமும் உடுக்க உடையும் திண்ணமாக நம் மக்களுக்குத்தந்து, பால் நினைந்தூட்டும் தாயினுஞ் சாலப் பரிந்துமே ஊட்டி வந்த மகாத்மா காந்தியெனும் மண்ணுலகின் காமதேனு, மடிவறண்டு மாண்டு மடிந்து விட்டதே இன்று. என் செய்வோம் இனி எம் இந்திய மக்களே. என்பெலாம் இறைவனின் அன்பு, நகையெலாம் மக்கள்பால் நகை, ரம்பெலாம் ஆண்மையின் வரப்பு, குருதியெலாம் சத்தியத்தின் உறுதி, தோல் எலாம் துயர் நீக்கும் மேல் ஆடை என்று கூறும் வண்ணம், நேற்றுவரை நம்மிடை நிமிர்ந்து நின்று உலவியும், அமர்ந்திருந்து அருளியும் பரிமள சுகந்தத்துடனும் பார்ப்பதற்கு ரம்மியமாகவும் நம்பக்கல் இருந்த மகாத்மா காந்தியின் உடலும் தீக்கிரையாகித் தீய்ந்து சாம்பலாகிவிட்டதே என்று நினைக்க நம் நெஞ்சம் குமுறுகிறது, கண்ணீர் மல்குகிறது. உடல் ஓய்ந்து சாய்கிறது. ஒழுங்காக இதுவரைச் சுற்றி வந்த இவ்வுலகம் தனது அச்சாணி கழன்று, இப்போது அடி நுனி தெரியாமல் கட்டுப்பாட்டில் நில்லாமல் விர் என்று சுழன்று, விபரீதம் விளைவிப்பதைப் போல் நமக்குத் தோன்றுகிறது. மக்கள் உள்ளங்களில் ஓங்கிவளர்ந்த மருள் தீயைத் தனது மனோ சக்தியால் மடியவைத்த அதே மகாத்மா காந்தியடிகளின் உடலா இன்று இந்த மரத்தீயால் உண்ணப்பட்டு விட்டது என்று நினைக்குமுன்பே நமக்கு மயக்கம் உண்டாகின்றது. போப்பைப்போன்ற மதப் புனிதர்களும் ஜார்ஜ் மன்னரைப் போன்ற சாம்ராஜ்ய மேதாவிகளும் ஈன்ஸ்டின்னைப்போன்ற இணையற்ற விஞ்ஞானிகளும், பர்னார்டுஷாவைப் போன்ற பரந்த அறிவாளிகளும், மக்கார்தரைப்போன்ற மாண்புற்ற வீரர்களும் தீண்டப்பெறின் பெருமையுடையோம் என்று போற்றிய மகாத்மாவின் புனித உடலைத் தீயன்றோ இன்று தீண்டிப் பயன்பெற்றது. இதன் காரணமாக தீயர்களையும் தாங்கி நிற்கும் பூமிதேவியின் பொறுமை நமது மகாத்மாவின் பொறுமையையே நினைவூட்டி நிற்கின்றது.

மதிப்பிட முடியாத நம் மாணிக்கத்தை, மனத்திற்கு ரம்மியமான நம் மரகதத்தை பேதமை நீக்கும் ஞானப்பிழம்பை, குவலயத்திற்கு வழிகாட்டிய நம் குருமணியை, உலகம் உய்ய அவதரித்த உத்தமரை மகாத்மா காந்தியடிகளை இன்று யாவரும் புத்தரே என்று போற்றுவர், ஏசுவே என்று ஏத்துவர், நாயகமே என்று நாடுவர், அவதாரரே என்று அழைப்பர் என்று அழைப்பதைக் காண்கின்றோம். ஆனால் உலகம் தோன்றுப நாள்தொட்டு இன்றுவரை மகாத்மாவைப் போன்று வாழ்ந்த மகிபனும் வீழ்ந்த அவதாரமும் இல்லை என்று நாம் துணிந்து

கும்பிட்டான். மகாத்மாவும் அவ் வஞ்சகனை வணங்கினர். அத் தருணத்தில் ஹிம்சை உருவானவன் அஹிம்சையின் உருவான மகாத்மாவைக் கொன்ருன். ஹிம்சை என்னும் பேய் மாறுவேடம் பூண்டு அஹிம்சை என்னும் தெய்வத்தை முதலில் வணங்கிற்றல்லவா? அது தான் அதன் படுதோல்வி, தன் சுய ரூபத்தில் நின்றது அஹிம்சை. ஆதலால், வென்றதும் அதுவே.

பிறரையும் பகைவரையும் தன்னைப்போலவே நேசி என்ருர் ஏசு பிரான். அதற்குத் தண்டனையாக அவர் சிலுவையில் அறையப்பட்டார். முஸ்லீம்களையும் சிறுபான்மையினரையும் முகமன் கூறி நேசி என்ருர் காந்திபிரான். அதற்குத் தண்டனையாக அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். ஏசுநாதர் இறந்ததும் வெள்ளிக்கிழமை மாலை, எம் காந்தி நாதர் மாண்டதும் வெள்ளி மாலையே. தாம் இறக்கும்பொழுது அவர்களை மன்னியும் என்று ஏசுநாதர் கூறினர். தாம் இறக்கும்பொழுது ஏ இராமா, இராமா என்று கூவினர் காந்திநாதர்.

தமதுவாழ்நாள் முழுவதும் எந்த எந்த உயரிய கொள்கைகளுக்காக ஓயாது பாடுபட்டு உழைத்துவந்தாரோ அவற்றையெல்லாம் ஏறக்குறையத் தமது இறுதிப்பிரார்த்தனைப் பேச்சிலும் இறுதிக் கட்டுரையிலும் உறுதியாக வற்புறுத்திச் சென்றுள்ளார் நம் காந்தி வள்ளலார். ஏழை விவசாயிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் அரசாங்க உத்தியோகங்களையும் வழங்கவேண்டும் என்ருர். ஹரி ஜனங்களுக்கு ஆலயப் பிரவேசத்தின் அவசியத்தையும் அதன் உட்பொருளையும் அறிவுறுத்தினர். அழியக்கிடந்த ஆலயத்தையும் நம் அரும் சமயத்தையும் தக்க வழியைக் காட்டிக் காப்பாற்றிய இவ்வள்ளலார்காந்தியடிகட்குத் தனிக்கோவில் அமைப்பதைக்காட்டிலும்அவர்உருவத்தை ஒவ்வொருவருள்ளக் கோவிலிலும் வைத்து வாழ்த்துவதே சாலச்சிறந்ததெனச் சாற்றுவேன். நந்தனரையும் நமக்கு ஞாபகமூட்டிச் சென்ருர். நம் தனமாகிய மகாத்மா குனிந்து சென்ற இந்தியனை நிமிர்ந்து நடப்பித்த கோமகன் நம் மகாத்மா. பிளவுபட்ட மனங்களை பிணைத்துப்பின்னிய பெரியார் நம் காந்தியடிகள். அணுகுண்டு என்றுமே செய்ய முடியாததைத் தம் ஆத்ம குண்டால் ஆற்றிக்காட்டிய அவதார புருடர் நம் மகாத்மா. இல்லறத்தின் இலக்கியம் வாய்மையின் வாழ்விடம். மெய்மைக்குச் செம்மையரண், உண்மைக்குத்திண்மையுரு, ஏழ்மைக்கு ஏற்றபுகல், எளிமைக்கோர் இலக்கணம், இந்தியாவின் இருதயம், உலக மக்களின் ஆன்மா, அஹிம்சையின் அவதாரம், இறைபணிக்கோர் நிறையணி, தேசபக்தியின் திகழ்கோயில் இறுதியாகத்தியாகத்தின் சிகரம். இத்தகைய எங்கள் மெய்த்தலைவரை இன்று பறிகொடுத்துப் பரிதபிக்கின்ருேம் இப்பாரின் மக்கள் புன்முறுவல் பூத்துப் பொலிந்திலங்கும் அவர் தம் பொன்முகமும், நன் மொழியே பேசி நலம் பயக்கும் அவர் தம் நல் நாவும் எங்கே? அந்தோ எங்கே இனிக்காணப்போகிருேம்? இந்திய வானத்தின் மதி, எங்கும் ஒளி வீசிய காந்திமதி மறைந்தது. இருள் நிறைந்தது. இன்றுவரை நம் இதயத்தில் நிலவிய இனிய ஒளி அவிந்தது. எங்கும் இருள் குவிந்தது. ஐந்து கண்டத்தின் மக்களும் ஆறுதல் அற்றுத் தவிக்கின்றனர். ஏழு கடல்களும் கொந்தளிக்கின்றன. எட்டுத்திசைகளும் அதிர்ந்துள்ளன.

1928-ம் ஆண்டில் திருச்சியில் மகாத்மாவைக் கண்டேன். அப்போது வயது எனக்குப்பதினெட்டு மகாத்மாவைக் கண்டமாத்திரத்தில் நான்கொண்ட ஆனந்தத்தால் கண்ணீர் விட்டேன், பின் தேம்பி

அழுதேன். அருகிலிருந்தவர் நகைத்தனர். ஆனால் இவ்வாண்டு ஜனவரி மாதம் முப்பதாம் தேதியும் அழுதேன். இது அவரை இழந்ததின்பயனாக இதனிடையில் ஒரு நாள் நான் மகாத்மாவைச் சந்தித்துப் பேசினேன். குறும்புத்தனமாக நமது பாப்புஜியிடம் ஒரு கேள்வியை போட்டு வைத்தேன். ஆனால் அவர் குலுங்க குலுங்க நகைத்துத் தன் மோகனச்சிரிப்புடன் 'கடவுள் உன்னைக் காப்பாற்றட்டும்' (நரகினின்றும்) என்று ஆசி கூறினார். தாம் உயிர் விடும் தருணத்திலும் மகாத்மா காந்தியடிகள் பேசியிருக்கக் கூடுமாயின் அப்போதும் அவர் நம் நாட்டு மக்களிடம் 'கடவுள் உம்மைக் காப்பாற்றுக'' என்பதல்லாமல் வேறுஎன்ன கூறியிருக்கக்கூடும்?

வாழிய காந்திஜி? வாழிய நாடு.

(வானொலி நிலையத்தார் இசைவு பெற்றது)

சாதி மதம் ஒழிக!

(கோவை, கு. ப. கந்தசாமி)

★

சாதி மதம் பேதமென்ற பேயை யிந்தத்
தாய் நாட்டில் புகுத்தி வைத்த துச்ச ரெலாம்
சுதந்திரத் தோணி தனில் அமர்ந் தின்று
சாதி மதம் ஒழிக! என ஓலமிட்டுச் 1.

சுற்றுகின்றார் நாட்டினிலே நாண மின்றி
சுய வாழ்வுக் காரரிவர் சொல்தனிலே
சாதி மதம் சாய்ந்திடுமோ? சான்றோர்! சொல்வீர்!
சதிக் கூட்டம் சுரண்டாமல் விடுவதுண்டோ? 2.

கலப்பு மணம் செய்திடுவோம்! என்றே இந்த
களிப்பாலே கூறுகின்றார் வாயளவில்;
செயலளவில் செய்ய ஒரு தமிழினர்கள்
சனைக்கரதத் திருவுளத்தைக் கொண்டுள்ளோரே! 3.

சாதி மதம் ஒழிக வென்று! செயலிலின்றே
சதிகாரச் சூழ்ச்சிதனை சுட்டெரித்து.
மக்களோடு மக்களாக வாழச் செய்து
மகிழ்ச்சியுற சமய பூசல் தகர்த்தெறிவீர்!! 4.

:-: உலக உத்தமர் :-:

அறிஞர் C. N. அண்ணாத்துரை M. A.

★

உலக உத்தமர் மறைந்ததால், உள்ளம் நொந்து கிடக்கும் நாம், ஒருவருக்கொருவர் ஆறுதல் மொழி கூறிக்கொள்ளும் நிலையிலே இருக்கிறோம். ஒரு கிழமைக்கு மேலாகிவிட்டது, இழி குணத்தான், மானிலம் போற்றும், மகாத்மாவைக் கொலை செய்து, உலகம் இன்றும் அழுதுகொண்டு தான் இருக்கிறது. அவருடைய மாண்புகளைப் பற்றிப் பேசாத நாடில்லை. எழுதாத ஏடில்லை. எங்கும் கலக்கம்-ஏக்கம் -எவருக்கும் தாங்கொணாத்துக்கம். அதை மாற்ற அவரைப்பேச முனைகிறோம். ஒவ்வொரு பேச்சும், மீண்டும் மீண்டும் கண்ணீரைக்கொண்டு வரவே உதவுகிறது. மூண்ட தீ அணையவில்லை—துக்கம் தரும் நிலை அது. ஆனால் அவர் புகழ் ஒளி பரவுகிறது. அதை எண்ணுவோம். ஆறுதல் பெற முயற்சிப்போம்.

நாம் அரசுரிமை இழந்திருந்த போது அவர் பிறந்தார். அவர் மறையும்போது நாம் அரசுரிமை பெற்று வாழ்கிறோம்.

அவர் பிறந்தபோது நமது நாடு உலகிலே இழிவும் பழியும் தாங்கிய நாடாக இருந்தது. அவர் மறைந்திடுவதற்கு முன்னம், மாஸ்கோவிலிருந்து நியூயார்க் வரையிலே உள்ள சகல நாடுகளிலும் நமது விடுதலையை விளக்கும் விருது பெற்று, தூதுவர்களும், பிரதிநிதிகளும் வீற்றிருக்கும் நிலை உண்டாகிவிட்டது.

அவர் பிறந்தபோது உலக மன்றத்திலே, நமக்கு இடம் கிடையாது. இன்று நாம் இருந்தால், உலக மன்றத்திலே புதியதோர் பலம் என்று பல நாடுகள் எண்ணும் நிலை ஏற்பட்டுவிட்டது.

அவர் பிறந்தபோது, இங்கு தேவைப்படும் எந்தச் சாமானுக்கும், வெளி நாட்டின் தயவை நாடி ஏங்கிக் கிடந்தோம். இன்று வெளி நாடுகள், நமது சரக்குகளைப் பெற நம்முடன் ஒப்பந்தங்கள் செய்து கொள்வதற்குத் தமது ராஜ தந்திரத்தை உபயோகிக்கும் அளவு மாறுதலைக் காண்கிறோம்,

அவர் பிறந்தபோது, கோயில்கள் மூடிக்கிடந்தன. தீண்டாதார் என்று தீயோரால் அழைக்கப்பட்டு வந்த தியாகப் பரம்பரையினருக்கு அவர் கண்மூடுமுன், மூடிக்கிடந்த கோயில்கள் எல்லாம் திறந்துவிட்டன.

குடித்துக் கிடப்பது மிகச் சாதாரணம். சகஜம் என்று யாரும் எண்ணிக்கொண்டிருந்த நாட்கள், அவர் பிறந்த காலம். மது விலக்குச் சட்டம் அமுல் நடத்தப்படுவதைக்

கண்டான பிறகே அவர் மறைந்தார்.

அவர் பிறந்த காலத்திலே, சூரியனே அஸ்தமிக்க அஞ்சும்படியான அளவுள்ளதாக இருந்தது, பிரிட்டிஷ் சாம்ராஜயம். அந்தச் சாம்ராஜ்யத்தின் ஆதிக்கப் போக்கு அழிந்ததைக் கண்டான பிறகே, அவர் கண்களை மூடினார்.

அவர் பிறந்தநாட்களிலே, பிரிட்டனிலிருந்து, கவர்னர்களும் மற்ற அதிகாரிகளும் இங்கு வந்த வண்ணம் இருந்தனர். ஆள்வதற்கு அடிமை இந்தியாவை, விட்டு வெளியே அவர்கள்போகும் காட்சியைப் பார்த்துவிட்ட பிறகே, உத்தமர் உயிர் நீத்தார்.

இவ்வளவையும் அவர் மந்திரக்கோல் கொண்டோ, யாக குண்டத்தருகேநின்றோசாதிக்கவில்லை - மக்களிடையே வாழ்ந்து மக்களின் மகத்தான சக்தியைத் திரட்டிக் காட்டிச் சாதித்தார். புதிய வாழ்வு தந்தார். புதிய அந்தஸ்து தந்தார்.

இவ்வளவும் தந்தவருக்கு, அந்தத் துரோகி தந்தது, மூன்று குண்டுகள், சாக்ரடீசுக்கு விஷம் தந்தது போல.

அவர் சாதித்தவைகள் மகத்தானவை, ஆனால் அவர் சாதிக்க எண்ணியிருந்தவை, வேறு பல, அவை மேலும் மகத்தானவை,

நாட்டிலே உள்ள மற்றக் கொடுமைகள். ஜாதிச் சனியன், வறுமை, அறியாமை ஆகியவற்றை அடியோடு களைந்தெறிந்து விட்டு, உலகினர் கண்டு பின்பற்றத் தக்க முறையிலே, உன்னதமான இலட்சியங்களைக்கொண்ட ஓர்சமுதாயத்தைக் காண விரும்பினார். அதற்காக அரும்பாடு பட்டு வந்தார். அந்த நேரத்தில், ஆத்திரத்தால் அறிவை இழந்தவனால் அவர் கொலை செய்யப்பட்டார்.

அவர் கண்ட, அந்த நாள் இந்தியா, வீரர்களைக் கோழையாக்கி விடக் கூடியது. முப்பது கோடிக்கு மேற்பட்ட மக்கள் அவர்களின் முதுகெலும்பு முறிந்தது போலிருந்தது, அடிமைச் சுமையினால் நம்பிக்கை தகர்ந்து போயிருந்த நேரம்.

முடி தரித்த மன்னர்களெல்லாம் ஆங்கில ஆட்சியின் பிடியிலே, கோட்டை கொத்தளம் கட்டிக் காத்தவர்களெல்லாம் நாட்டை இனி மீட்டிட முடியாது, என்றெண்ணி வாட்டமுற்றுக் கிடந்தனர். எப்படியோ ஆட்சி நடக்கட்டும், இதற்கு பயபக்தி விசுவாசம் காட்டி ஏதேனும் பலன் பெற்று, காலந்தள்ளுவோம் என்று பலர் எண்ணிவிட்டனர்.

அவர்களிடம் ஆயுதம் இல்லை — ஆட்சியாளர்களோ, ஆயுத பலமுள்ளவர்கள்.

அவர்களிடம் நம்பிக்கை இல்லை. ஆட்சியாளர்களிடமோ, நம்பிக்கை, ஆணவமாகி விட்ட நிலை,

இந்த நிலையிலே தோன்றினார். விடுதலைப் போர் தொடுக்க. யார் அந்தச் சமயத்திலே நாட்டை நோக்கினாலும், நம்பிக்கை துளியும் பிறக்காது. இவர் நம்பிக்கையுடன் பணியாற்றலானார். நாட்டு மக்களிடம் நம்பிக்கை ஊட்டினார் அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானார், நானிலத்தின் நன் மதிப்பைப் பெற்றார்.

முடியுமா என்ற சந்தேகத்தை அவர் விரட்டினார். நாம் விடுதலை பெற வேண்டுமா, அல்லவா? என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டார், ஆம் என்றது அவருடைய தூய்மையான உள்ளம் — உள்ளம் உரைத்ததை ஊராருக்கு அறிவித்தார். ஊரார் சந்தேகமும் பயமும் கொண்டனர், விடுதலை வேண்டும். நாடு மீளவும், கேடு தீரவும், நாம் இனி மனிதராய் வாழ

வும், கட்டாயமாக விடுதலை வேண்டும். ஆனால் நம்மால் முடியுமா? என்று கேட்டனர்.

விடுதலை வேண்டும் என்று மனம் கட்டளையிட்டுவிட்ட பிறகு, மறு கேள்வி ஏது? அவர் கேட்டார்.

'அவர்கள் பலசாலிகள்' மக்கள் கூறினர்.

'நாம் பலம் பெற வேண்டும். பெறுவோம்' அவர் உரைத்தார், உறுதியுடன்.

'சிறையிலே தள்ளுவார்களே' பயத்துடன் கூறினர் மக்கள்.

'தள்ளுவர் — ஆனால் இப்போது உள்ள இடமும் சிறைதான், இது பெரிய சிறை' அவர் பதில் சொன்னார், நகைச் சுவையுடன்.

தடியடி, துப்பாக்கி, தூக்கு மேடை, அந்தமான் தீவு, என்பன போன்ற எத்தனையோ ஆபத்துகள் அடுத்தடுத்து வரும் — உரிமைப் போரிலே உள்ள ஆபத்துகளை அவர் ஒளிக்காமல் குறைக்காமல் கூறினார்.

இவ்வளவையும் நான் பொருட்படுத்தப்போவதில்லை—மரண பயமின்றி இக் காரியத்திலே ஈடுபடத் தீர்மானித்து விட்டேன் — ஆயுத பலத்தை நம்பி அல்ல, மன உறுதியை நம்பி—நாம் நமது பிறப்புரிமைக்காகப் போராடுகிறோம். இது தர்மம் என்ற பலத்தை நம்பி போரைத் தொடுக்கிறேன் என்றார், தொடுத்தார். வயலோரத்திலிருந்து வாட்டமுற்ற உழவன் முதற்கொண்டு வசீகர வாழ்விலே இருந்து வந்த சீமான் வீட்டுச் செல்லப்பிள்ளை வரையிலே அவர் முகாமில் வந்து குவிந்தனர்

(தொடரும்)

★

K. உச்சே கவுடர் அவர்கள் குமாரன்

K. O. பெட்டே கவுடர்

புக்செல்லர், பேப்பர் ஸ்டேஷனரி மர்ச்சென்ட்,

ராஜ வீதி, :: கோயமுத்தூர்.

எங்களிடத்தில் பள்ளி, மாணவ மாணவிகளுக்கு வேண்டிய எல்லாவிதமான புஸ்தகங்களும், புராணம், இதிகாசம், கதை சம்பந்தமாக நல்ல உயர்ந்த காவியங்களும், சிட்டா, குறிப்பு, பேரேடு போன்ற கணக்கு புஸ்தகங்களும், மற்ற ஸ்டேஷனரி சாமான்களும், மொத்தமாகவும், சில்லரையாகவும் சரசமாய் குறைந்த விலைக்கு விற்கப்படும்.

கைத்தொழில் போர்ட் அங்கத்தினர்களுக்கு அறிஞர் ஜி. டி. நாயுடு அவர்களின் வரவேற்பு.

சர்க்கார் கொள்கைபற்றி கைத்தொழில் டைரக்டர் விளக்கம்.

கோயமுத்தூர், மே 8.

கைத்தொழில் இலாகா டைரக்டர் திரு. டி. எம், எஸ். மணி ஐ. சி. எஸ்,, சென்னை நிதி இலாகா காரியதரிசி திரு. டி. என். எஸ். ராகவன் ஐ. சி. எஸ்., சென்னை சட்டசபை உறுப்பினர் திரு. ஆர். வி. சுவர்மிநாதன். கைத்தொழில் உதவி டைரக்டர் திரு. தத்தாத்ரேயன் பி. இ., திரு, சி. சேஷாசலம் எம். ஏ, பி. எல்., எம். எச். காசிம் சேட் ஜே. பி., இராவ்சாகிப் ரங்கநாத பூஞ்சா பி. ஏ., பி. எல்., சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சி கொரடா திரு. எம். பாபினீடு ஆகியவர்கள் அங்கத்தினர்களாகஉள்ள கைத்தொழில் போர்டாருக்கு 5-ம் தேதி மாலை 5.மணிக்குத் தமது இல்லத்தில் திரு. ஜி.டி. நாயுடு அவர்கள் ஓர் தேநீர் விருந்தளித்து உபசரித்தார்.

திரு. ஜி. டி. நாயுடு பேசுகையில் காங்கிரஸ் சர்க்கார் செய்துவரும் சில காரியங்கள் சரியாக இல்லை என்றும், பொதுமக்கள் கைத்தொழில் போர்டாருடன் ஒத்துழைத்து தென் இந்தியாவின் கைத்தொழில் அபிவிருத்திக்ககப் பாடுபட வேண்டும் என்றும், மோட்டார் போக்குவரத்துத் தொழிலைத் தேசியமயமாக்குவதால் சர்க்காருக்கு நட்டம் தானென்றும், இந்தத் துறையில் அநுபவமில்லாத சர்க்கார் தேசியமாக்கும் பொறுப்பை ஏற்பது தவறு என்றும் கூறினர்.

இறுதியில், "தவக்கமின்றி கோவை ஆர்தர்ஹோப் பாலீ டெக்னிக்கில், மெக்கானிக்கல், எலக்ட்ரிகல் படிப்புத் திட்டங்களை உடனே ஏற்படுத்த வேண்டுமென்று கைத்தொழில் இலாகா ஜாயின்ட் டைரக்டர் முதல், முதன் மந்திரியார்வரை யாவரையும் கேட்டுக்கொள்கிறேன்' என்று முடித்தார்.

பதில் கூறுமுகத்தான், கைத்தொழில் போர்டு தலைவர் திரு; டி, எம். எஸ். மணி ஐ. சி. எஸ். அவர்கள் கூறியதாவது:—

"அரசாங்க உத்தியோகஸ்தர்கள் தங்களாலானதைச் செய்துவருகிறுர்கள். திரு. ஜி. டி. நாயுடு அவர்களுடைய சில கேள்விகளுக்கு அரசாங்கத்தின் சார்பாக பதில் கூறும் அதிகாரம், ஜனப் பிரதிநிதித்துவங்கொண்ட மந்திரிகளுக்குத் தானுண்டு. கைத்தொழில்கள் சம்பந்தமாக சர்க்காரின் கொள்கைகளை மட்டுமே நான் கூற விரும்புகிறேன். இந்த மாகாணத்தின் கைத்தொழில்கள் அபிவிருத்திக்கு வேண்டிய உதவியைச் செய்ய சர்க்கார் தயாராக

உள்ளனர். எந்தஎந்த கைத்தொழில் களுக்கு எந்த எந்தவிதமான உதவியை அளிக்கலாம் என்பதை யோசித்து சர்க்காருக்குபோர்டார் சிபார்சு செய்யலாம். நல்ல பொருள்களை உற்பத்தி செய்யக்கூடிய தொழிற் சாலைகள்மாகாணம்பூராவும்தேவை. அவ்வாறு செய்வதற்கு வேண்டிய சாதனங்கள் எல்லாம் நமது மாகாணத்தில் இருக்கின்றன. தற்சமயம் அவசியமாக இருப்பது சரியான திட்டம் ஒன்றுதான்.

போர்டு மெம்பர்கள் பல கைத் தொழிற்சாலைகளும், கைத்தொழில் ஸ்தாபனங்களும் உள்ள பிரதேசங் களுக்குச் சென்று, நிலைமையை நேரில் பார்த்து சிபார்சு செய்ய உத் தேசித்துள்ளனர். பழைய சர்க்கார் எவ்வாறு இருந்தபோதிலும், இன் றைய சர்க்கார் கைத்தொழில்கள் விஷயமாய் அதிகக் கவனம் செலுத் தித்தான் வருகிறார்கள். சரியானபடி ஆட்கள், பொருள்கள் ஆகியவை கிடைக்காததால், புது தொழில்கள் ஆரம்பிக்கப்பட சிறிது தாமதமேற் படுகிறது.

மெக்கானிக்கல், எலக்ட்ரிகல் படிப்புத் திட்டங்கள் ஏற்படுத்தப் படும்; அதுபற்றி ஐயமே வேண் டாம். தேவையான ஊழியர்களும், பொருள்களும் கிடைத்தவுடனே இது நிறைவேறும்; அதுவரை சிறிது காலதாமதம் ஏற்படுவது தடுப்பதற் கியலாத ஒன்று''.

பின்னர், திரு. டி. என். எஸ். ராகவன் ஐ. சி. எஸ்., அவர்களும், எம். பாபினீடு எம். எல். ஏ. அவர்கள் ஆங்கிலத்திலும், பாகனேரி ஆர். வி. சாமிநாதன் எம். எல். ஏ. தமிழிலும் சொற்பொழிவு ஆற்றினர்கள். வழக்கறிஞர் டி. ஆர். சுந்தரம் நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

மேன்மையான 100, 80 நெ. நூல் சேலை
களுக்கு சிறந்த இடம் மொத்த
வியாபாரிகளுக்கு

சி. வெ. வே. வெங்கிடராம செட்டியார்,
ஜவுளி வியாபாரம்,
264. ஒப்பணக்கார வீதி. கோயமுத்தூர்.

நாணயத்திற்கும், குறைந்த விலைக்கும்
பெயர் பெற்ற இடம் இதுவே.

கலையும் ஒளியும் தந்த கலைஞர்கள்.

காலஞ்சென்ற வின்சென்ட் அவர்கள்

★

கலை வாழ்விற்த பாதை வகுக்கிறது; ஒளி நம்மையிருளில் வீழ்ந்து தவிக்காதபடி தடுக்கிறது; இத்தகைய மேம்பாடு அளிக்கும் இவ்விரண்டு சக்திகளும் முகத்திற்குற்ற இருவிழிகளாகும். அந்தயிருவித நன்மையையும் கோவை நகர மக்களுக்கு முதன் முதல் வழங்கிய கலைஞர் காலஞ்சென்ற திரு. வின்சென்ட் அவர்களாவார்கள். கோவைக்கு முதன் முதல் மின்சாரத்தைத் தந்துதவியவரும் அவரே. படக்கலையை கோவையில் ஆதியாகக் கண்டு களித்ததும் அவராலே. மறைந்த வின்சென்ட் அவர்கள் வழிகாட்டியாக கலைத்துறையிலுப், ஒளியுலகத்திலும் கோவை சம்பந்தப்பட்டவரையிலிருந்தாரென்பதை மறுக்க முடியாது அவருக்குப்பின் அவர் தனயன் தந்தையினு மிக்க ஆற்றலுடையவரா யிருந்து தந்தை காத்த புகழ் கோவைக்கு மட்டும் அரணாக யிருந்ததைத் தகர்த்து தமிழகம் முழுதிலும் அப்புகழைப் பரப்பினார். தந்தையினும் தனயன் பெரியாரானார். திரு. பால் வின்சென்ட் அவர்களையீன்ற வயிறு உண்மையிலே திருவுடையது. அவரை வளர்த்த தந்தையாரின் மாண்பு போற்றற்குரியது.

இன்று படக்கலை தியேட்டர்களை நவீன விஞ்ஞான சாதன முறைகளுடனும், சுகாதார வசதிகளுடனும் அழகிய முறையில் உடன் கோவையில் கட்டுவித்து தமிழக முழுவதிலும் வின்சென்ட் லைட்ஹவுஸ் ரெயின்போ போன்ற கம்பீர

மான தியேட்டர்களெங்குமே யிலையெனும்படி கட்டுவித்த பெருமை திரு. பால்வின்சென்ட் அவர்களுக்கே உரியது. திரு. பால் வின்சென்ட் படக் கலைத் துறையின் நுணுக்கத்தைத் தெளிவாக அறிவான் வேண்டி அமெரிக்கா சென்று இது போதுதான் திரும்பி வந்துள்ளார்.

சினிமாக் கலை நுணுக்கம் பெற்ற பால் வின்சென்ட் பல நாள் வாழ்ந்து கோவையை லாஸ் ஆஞ்சலாக்குவரென எதிர்பார்க்கிறோம்.

ராவ்சாகிப் P. வின்சென்ட் அவர்கள்

PHONE: 3202.
M.C. APPASAWMY CHETTY & CO.
TRI-COLOUR. HALF-TONE & LINE BLOCK MAKERS.
14, JONES ST, MANNADY, MADRAS.

ஸ்ரீ

பாலமலை ரங்கநாதர் மில்ஸ்

லிமிடெட்.

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் :-

கோயமுத்தூர் தாலுகா, பெரியநாயக்கன்பாளையம் P. O.

கோயமுத்தூரில், பேர்பெற்ற மில்களின் வரிசையில் சேர்ந்த இம்மில் தக்க அனுபவஸ்தர்களால் நிர்வகிக்கப் பெற்று வருகிறது.

ஸ்பின்னிங்

40-நெ வரை ரிங்கு நூல்

வருடந்தோறும் பங்குதாரர்கட்கு நல்ல வட்டி வந்துள்ளது.

இந்திய முதல்
இந்திய தொழிலாளர்
இந்திய நிர்வாகம்

ஆக எல்லாம் இந்திய மயமாக நடைபெற்று வருகிற

தேசிய தொழில் ஸ்தாபனமாகும்

ஆதலால், இந்த மில் நூலை அனைவரும் ஆதரியுங்கள்.

Managing Agents: S. K. ரங்கசாமி நாயுடு & கம்பெனி,
பெரியநாயக்கன்பாளையம் போஸ்டு, கோயமுத்தூர் தாலுகா

பெண்களால் முடியுமா?

தோழியர். குஞ்சிதம்–குருசாமி, பி. ஏ., எல். டி.,

★

இது கட்டுரையல்ல. அலைகள் போல் மோதிய சில எண்ணங்களின் தொகுப்பு. தொகுப்புக் கூட அல்ல, குப்பை. பூங்காவிற்குள் புகுந்து என் மனம் போன போக்கில் சில பூக்களைக் கொய்தேன். அவைகளை ஒரு கூடையில் கொட்டி உங்களிடம் தருகிறேன். அத்தனையும் வாசனைப் பூக்களல்ல. கண்ணுக்கு மட்டும் இனிய கனகாம்பரம் போன்ற காட்டுப்பூக்கள். முதல், மூக்கிற்கு இனிய முல்லை, மல்லிகை, மகிழம்பூவரையில் பல வகைப் பூக்களைக் கொய்திருக்கிறேன். இவைகளிற் சில ஆண்களுக்குப் பிடிக்காதவை.

'பூ' என்றாலே மாம்பழத்தைக் கண்ட குழந்தை போல ஆசைப்படும் பெண்களுக்கே பிடிக்காத பூக்கள்கூட சில உண்டு. கண்ட பூக்களைக் கொய்தேன் என்றாலும் ஊமத்தம்பூ, புளியம்பூ, வாழைப்பூ போன்றவைகள் இக்கூடையில் இல்லை. வாசனைப் பூக்களாக மட்டுமே இருந்தால், சரமாகத் தொடுத்துத் தந்திருப்பேன். கதம்பம் என்பதால் பெண்கள் விரும்புவர்; ஆண்களும் ஆசைப்படுவர். பலருக்குப் பிடிக்காத சில புதுவகைப் பூக்களும் இருக்கின்றன. ஆகையால் தொடுக்கவில்லை.

★

"ஆண்களோடு பெண்களும் சமம்—சமமாக இருக்கவேண்டும் என்கிறீர்களே, எப்படி முடியும்? ஆண்கள் செய்யும் எல்லா அலுவல்களையும் பெண்கள் செய்ய முடியுமா? இயற்கையே அவர்களை பலங் குறைந்த பாத்திரங்களாக அமைத்திருக்கிறதே!" என்பது, இந் நாட்டில் மட்டுமல்ல, எந்த நாட்டிலும் கேட்கப்படும் கேள்வி.

இயற்கையே மனித சமுதாயத்தை "பலங்குறைந்த பாத்திரங்களாக" அமைத்திருக்கிறது. பெண்களை மட்டும் என்பது தவறு மனிதருக்குப் பறக்கும் சக்தியை அளிக்க மறந்துபோயிற்று, இயற்கை. பறவையைப் பார்த்த மனிதன் ஏங்கினான். சும்மாயிருந்தானா? அதைவிட விரைவாகப் பறக்கத் தொடங்கிவிடவில்லையா? இயற்கை அமைப்பை வெல்வதுதான் மனிதனுக்கு ஏற்பட்டுள்ள தனி சக்தி. இயற்கையோடு இயைந்த வாழ்வு முனிவர்களுக்கும் சாதுக்களுக்கும்தான். எஸ்கிமோக்களையும் வேண்டுமானாலும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

'வாய்ப்பு"—அல்லது சந்தர்ப்பந்தான் முக்கியம். வெள்ளையர் வாய்ப்பு அளித்திருந்தால் இந்தியர் அவர்களை மிஞ்சியிருப்பார்கள், எல்லாத் துறைகளிலும். பார்ப்பனர் தடுக்கா திருந்தால், திராவிடர்கள் அவர்களை வென்றிருப்பார்கள், எல்லாத் துறைகளிலும். ஆண்கள் வாய்ப்பு அளித்திருந்தால்—அல்ல, அல்ல—தடுக்காதிருந்தால், பெண்கள் முன்னணியில் இருப்பார்கள். 'சர்கஸ்' பெண்களைப் பார்த்துப் பெருமூச்சுவிடும் ஆண்களைப் பார்த்ததில்லையா?

ரஷ்யாவில் ஏற்பட்ட பொருளாதாரப்புரட்சியில்பெண்கள் என்ன செய்தார்கள் என்பது எத்தனை பேருக்குத் தெரியும்? ஒற்றர்களாயிருந்தார்கள். வெடிகுண்டு வீசினார்கள். ஆண்களோடு கூடி ஆட்சியைக் கவிழ்க்க சதி செய்தார்கள் சிறை சென்றார்கள். சைபீரியாவுக்கு நாடு கடத்தப்பட்டார்கள். தூக்கு மேடையிலும் ஏறினார்கள். இரண்டாவது அலெக்ஸாண்டரைக் கொன்றது யார் தெரியுமா? சோவ்யா பெரோவ்ஸ்காயா என்ற பெண்தான்.

ரஷ்யாவில் பெண்கள் செய்யாத, அவர்களுக்குத் தெரியாத, வேலைகள் ஒன்றுமே இல்லை. உலக வரலாற்றிலேயே முதன் முதல் வெளி நாட்டுத் தூதுவராக நியமிக்கப்பட்ட பெண் ரஷ்யப் பெண்தான்.

'வாய்ப்பு' இருந்தால் ஆச்சாரியார் கவர்னராக இருப்பதுபோலவே சரோஜினிதேவியும் கவர்னராக இருக்கலாம் என்பதை இந்த நாட்டிலேயே காண்கிறோமே!

பெண்களால் எதுவும் முடியும், வாய்ப்பு மட்டுமிருந்தால்! மாடேம் க்யூரியைப் போல் ரேடியம் கண்டு பிடிப்பார்கள்; ஜோன் ஆப் ஆர்க் போல் போர்முனைக்குச் செல்வார்கள்; ரஷ்யப் பெண்களைப்போல் புரட்சியும் செய்வார்கள்.

★

இந்த நாட்டுப் பெண்களை எவ்வளவுதான் குறைவாகக் கூறினாலும் எத்தனையோ வகைகளில் ஆண்களைவிட முற்போக்கடைந்திருக்கின்றனர். இதோ, ஓர் எடுத்துக் காட்டு.

லட்சுமி செட்டியார், கல்யாணி முதலியார், பங்கஜம் பிள்ளை, சிவகாமி நாயக்கர், பார்வதி அய்யர், சரஸ்வதி ராவ், கமலா நாயக்கர், வசந்தா அய்யங்கார், அலமேலு நாயுடு, நாகம்மாள்நாடார், வனஜா சர்மா, வள்ளியம்மை உடையார்–! கேள்விப்பட்டிருப்பீர்களா? சாதிப் பட்டத்தை உதறியவர்களல்லவா பெண்கள்? ஆண்கள் பின்பற்ற வேண்டிய, அறிவு பெறவேண்டிய பல விஷயங்களில் இதுவும் ஒன்று.

பிராமணப் பெண்களுக்குப் பூணூல் உண்டா? செட்டியார், வாணியர் ஆகிய பெண்களுக்குத் தான் உண்டா? இந்தக் கூட்டங்களின் ஆண்கள் மட்டும் ஏன் அணியவேண்டும்?

★

'பெண்களை அடிமைப் படுத்தி வைத்தது ஆண் இனம்தான்,' என்கிறீர்களே, சரியா? சிந்தனைக்கு வேலை கொடுங்கள். பெண் உழைப்பாளி இனம்: ஆண் முதலாளி இனம். பெண்ணுக்கு உரிமை தந்தால் ஆண் சர்வாதிகார வாழ்வு வாழமுடியாது. அதை கருதித் தான் மேல்நாட்டுப் பெண்களுக்குக் குதிகால்பக்கம் உயர்ந்த பூட்ஸ் கொடுக்கப்பட்டது. சீனப் பெண்கள் பிறந்தவுடன் இரும்பு பூட்ஸ் அளிக்கப்பட்டது. முஸ்லீம் பெண்களுக்கும் அவர்களைப் பார்த்துப் பழகிய சில வடநாட்டுப் பெண்களுக்கும் முகமூடி தரப்பட்டது. திராவிடப் பெண்களுக்கும் 18 முழப் புடவையும் பலவித நகைகளும் அழகு எனக் கூறப்பட்டது. காட்டு மிராண்டிப் பெண்ணுக்குப் பயங்கரமான அணிகள் தரப்பட்டன. அன்று கிடக்கட்டும். இன்று தான் என்ன வாழ்கிறது?

★

கிரிக்கெட், ஹாக்கி, புட்பால், சடுகுடு, கிட்டிப்புள்—இம்மாதிரி விளையாட்டுகளை நம் பெண்களும் ஏன் ஆடக்கூடாது? நாடகத்திற்கும், சினிமா நடிப்புக்கும் பாட்டுக்கும் சமையலுக்கும்தானா தகுதி? இவைகளைச் செய்யக்கூடிய ஆண்கள் இல்லையா? மலையாளத்தில்

சமையல் வேலைக்குப் பெண்கள் கிடைப்பதில்லை; ஆண்கள் மட்டும் ஏராளமாகக் கிடைக்கிறார்களே, ஏன்? சமையலுக்காகத்தான் பெண் இனம் இருக்கிறது என்பது இதன் மூலம் பொய்யாகிவிட வில்லையா? பெண் இனத்திற்குப் பெரிய முட்டுக்கட்டை ஆண் இனம்கூட அல்ல. அடுப்பங்கரைதான். சமையல், சமையல், சமையல்! 24 மணி நேரமும் இதே வேலைதானா? வண்டியிழுத்த மாடுகளை விடுதலை செய்ய மோட்டார் வந்தது; ரயில் வந்தது. ஆனால் அடுப்பங்கரைக் குள்ளேயே அடைபட்டுக்கிடக்கும் பெண் இனத்தை விடுவிக்க முடிய வில்லையே! சமையல் முறை, மாற வேண்டும். அவசியம் மாறியே தீரவேண்டும்.

★

"பெண்கள் பிள்ளைப்பேறு காரணமாக இயற்கையில் வலுவிழந்தவர்கள்," சிலர்.

அமெரிக்காவில் 10,000 டெஸ்ட் ட்யூப் குழந்தைகள் இருக்கின்றனவாமே!

★

குரு ராஜா ஆயில் மில்ஸ்

):o:(

★ உபயோகத்திற்கு உகந்தது
★ குணத்திலும் மணத்திலும் சிறந்தது
★ சுத்தமாகவும் தெளிவாகவுமுள்ளது
★ நல்ல முறையிலே தயாரிக்கப்பட்டது
★ மொத்த வியாபாரிகளுக்கு ஏற்றது

கடலை எண்ணெயும், தெளிவான தேங்காய் எண்ணெயும் மொத்தமாகக் கிடைக்கும்.

விபரங்களுக்கு:—

குரு ராஜா ஆயில் மில்ஸ்,
அவினாசி ரோடு, கோயமுத்தூர்.

தமிழ்ப் பணியே தலைசிறந்த பணி.

V. T. இராமசாமி.

இருந்தமி ழிதனைப் போல எங்குமே இல்லையென்று
பொருந்திடப் பேசுகின்ற புலவரே தமரமாரே
ஒருவனுக் கொருநாளைக்கு வோர் எழுத்தேனும் கற்று
தருவதே பெரிய தொண்டு தண்டமி ழாணையாமே

சிலப்பதிகாரம் சிந்து செந்துறை கலிப்பா வென்று
கலப்பின்றி நாவில் பேசும் காளை காளொன்று கேளீர்
மலைக்கின்ற தற்குறிக்கு மழமழ வென்றெழுத்தை
நிலைத்திடச் செய்வீரானால் நிசத்தொண்டு தமிழுக்காமே

எண் தொகை பத்துப்பாட்டு இயலிசை நடனம் மூன்று
பண்புடைத் தமிழின் மீது பற்றுள்ள தோழமாரே
கண் தெரியாத மாக்கள் கையெழுத்தேனும் போட
எண்ணியே தொண்டு செய்ய இன்ப நம் தமிழினாணை

திருக்குறள் பண்பைப் போலத் தேடினால் கிடையாதென்று
உருக்கமாய்ப் பேசிப் பேசி உள்ளத்தில் மகிழுவோரே
தெருத் தெருவெங்கும் நம்ம செந்தமிழ் மொழியை நன்கு
பெருக்கிடுந் தொழிலைச் செய்வீர் பேதமை ஒழியுந்தானே

காணியும் நஞ்சை பூமிகால் கால்நடைப் பொருளுள்ளோரே
வாணியின் கோவில்தன்னை வளர்த்திடப் பணமீயாமல்
கோணியில் தைத்துவைத்துக் கூளியைக் காவலாக்கி
வீணிலே யழியாதீர்கள் வீறுடைத் தமிழினாணை

புகழ்ந்திட்டால் பொன்கொடுப்பீர் புன்னகை மாதர்மீது
மகிழ்ந்திட்டால் அள்ளியள்ளி வாரியே வீசுவீர்கள்
திகழ்ந்திடும் கல்விக்காகச் சிறுதொகை தருமம் செய்ய
நெகிழ்ந்திடா மனதைக் கல்லின் நேரஎன்றல் தமிழினாணை

பாரதிக்கு விடுதலை!

—" இரெ. கரிகாலன் "—

பாரதி – இளசைக்குயில்–பாவலர் சிங்கம் – தமிழகத்தின் புத்துலகச் சிற்பி – மறுமலர்ச்சி கவிதா– யுகத்தின் மன்னன் – வாழும்பொழுது பட்டினிக்கு உடலைத் தத்தம் செய்து உயிரைத் தமிழ்க் கவிதைக்காக அர்ப்டணித்த கவியரசன். உடல் வாட்டத்தையும், வருத்தத்தையும் சிறிதேனும் சிந்திக்காமல் தன் முழு மூச்சையும் நலிவுற்ற தமிழ் சமுதாயத்திற்காக அங்குரார்ப்பணம் செய்த செம்மலின் சீரிய உள்ளத்திற்கு இன்று திரையிடப்பட்டு ஒரு சில கூட்டம் சுகிக்கின்றது.

பாரதியார் திரு. மெய்யப்பாவிற்காகத்தான் தன் கவிதையை – தன் பிறவிப்பயனை – தான் வாங்கிய மூச்சை – செலவழித்தாரா?

திருமதி. M. S. சுப்புலக்ஷ்மியின் வீணையிசைகளும் குரலுக்குத்தான் தன் வீர உணர்ச்சிக் கவிதைகளை — தன் இன்பக் கனவுகளை — காணிக்கையாக்கினாரா?

திரு. 'கல்கி' கோஷ்டிக்குத்தான் தன் கவிதை ஊழியத்தை – நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்த இன்ப ஞான சேமிப்பை – இன்ப வாழ்வு வாழ வழிகாட்டிய கவிதை குலத்தின் மின் சிரிப்பை அளித்துவிட்டு மறைந்துவிட்டாரா?

இந்தக் கேள்விகள் கேட்கப்பட்டால் வெட்கித் தலைகுனிய வேண்டியதைத் தவிர முற்கூறிய மூவர் மட்டுமல்ல. திரு. விஸ்வநாத அய்யரும் சரியான முறையில் பதிலிறுக்க முடியாமல் திணறத் திணற விழிப்பார்கள்.

பாரதிக்கு விழா நடத்தவும்; அவருக்கு நினைவுச் சின்னம் செய்யவும் பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் பணமும் உழைப்பும் தேவை. ஆனால் பாரதியின் பாடலை நாட்டு மக்கள் அனுபவிக்க அருகதையற்றவர்கள்! வெட்கம்!! வெட்கம்!!!

பாரதியாரின் பாடல்களை எல்லோரும் அச்சிட்டுப் பயன்பெற முடியவில்லை! பாரதியின் பாடலின் மீது முழு கவனத்தைத் திருப்பமுடியாமல் திகைக்கும் தமிழர்களுக்கு திரு. ராஜாஜி திறந்துவைத்த பாரதி மண்டபத்தை சிலாகிக்க இஷ்டம் வருமா? 'கல்கி'யின் முன் அட்டைப் பக்கத்திலும், 'வெள்ளிமணி'யின் முகப்பில் மெருகிட்ட படத்திலும் ஊரைஏமாற்றபாரதியின்திருஉருவம் பொறித்திருப்பதைக் கண்டு உள்ளம் வேகின்றது! தமிழ்நாட்டுத் தலைவர் திரு. காமராஜர் பாரதியைப்பற்றி வானளாவப் பேசுகிறார்! கர்மவீரர் ஓமந்தூரார் பன்னிப் பன்னிப் பல மேடைகளில் வானிடியக் கண்ணீர் மல்க பாரதியின் பாடல்களுக்கு விளக்கம் தருகிறார்! ரசிகமணி டி. கே. சி. பாரதி பாடலுக்கு மேனாட்டறிஞர் கருத்துக்களோடிசைத்து இன்பமாகத் தமிழ்நடை தீட்டுகிறார்!

இவர்களெல்லாம், மேடைக்கும், ஏட்டிற்கும் அலங்காரம் தீட்டும் பிரபலஸ்தர்களாக இது நாள் வரை

யிருந்தார்களே தவிர — இருக்கின்றூர்களே ஒழிய — தக்க கடவடிக்கைகளெடுத்து பாரதியாரின் பாடலைப் பொது உடமையாக்கும் வீரர்களாக விளங்கவில்லை. பாரதியாரின் கனவு மண்டபம் பணக்காரர்கள் வாங்கி ருசிப்பதற்காக கண்ணுடி அறையில் அழகாக அடுக்கப்பட்டிருக்கும் 'காஷ்மீர்' ஆப்பிள் பழங்களாகிவிட்டன. பசித்தவர்க்குதவாமல் பணம் படைத்தோர்க்குரிய சொத்தாக்கிவிட்ட சூழ்ச்சியை சூறையிடக் கண்டனக் கூட்டங்கள் தமிழகத்தின் மூலை முடுக்குகளிலிருந்து எழவேண்டும். விசேஷ அாதுகோஷ்டி இது சம்பந்தப்பட்டாரனைவரிடத்தும் பாரதி விடுதலைக் சழகத்தார் அனுப்பி தக்க சலுகை பெற முயற்சிபெறல் வேண்டும். முடியாதொழியின் அரசியலாரிடத்து முறையிட வேண்டும். அதுவும் விழலுக்கு வாாத்த நீரானுல் போராட்டமொன்று ஏற்படுத்தி வெற்றிகாணும் வரை தமிழகத்தில் வதியும் அனைவரும் மல்லாடவேண்டும். இது தமிழனின் கடமை. திரு. டி. கே. ஷண்முகத்தின் தனிப்பட்ட வற்புறுத்தல்ல. தமிழனனையின் மேம்பாட்டில் கருத்துவைக்கும் அனைவர்களின் கடமையாகும். திருவாளர்கள். நாரண துரைக்கண்ணர்களுக்கோ, வ. ரா.க்களுக்கோ; சீதாராமன்களுக்கோ; நெல்லையப்பர்களுக்கோ; ஏற்பட்ட மனவலிகளில்லை; சேர்மையான முறையில் தமிழகத்தை நிர்மாணிக்க வேண்டுமென விழைவோர்களின் சீரிய பணி யிது.

தமிழன் தன் கடமையை யுணரட்டும்! பாரதி பாடலைப் பொது உடமையாக்க தன் கடைசி ரத்தத்தையும் செலவழிக்க சித்தமாகட்டும்! வாழ்க பாரதி நாமம்! எழுக பாரதியின் கனவுலகம்! ஒழிக சுயநலப் பேய்கள்!

சிட்டி போட்டோ ஒர்க்ஸ்

(1907-ல் நிறுவப்பட்டது)

உரிமையாளர்: **B. V. சாமி & சன்ஸ.**

தென்னிந்தியாவில் முன்னணியில் நிற்கும் போட்டோ எடுக்குமிடம்.

கண்காட்சிகளில் தங்கப்பதக்கங்கள் பெற்றுள்ளது

வெறைட்டி ஹாலுக்கு எதிர்

கோயமுத்தூர்.

வெலாக்ஸ் பிரிண்டிங்கில் தனிப்பெயர்

மங்கையர் கடமை

(புலவர் சி. குழந்தையம்மாள்)

மங்கையர் இலக்கணங்களை விரித்து அதற்கேற்ப அவர்கள் கடமைகளை விரிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மகளிருடைய இயல்பாய குணம் நான்கு; அவையாவை யெனின் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, அச்சமென்பதுதான் காணப்படாததோர் பொருளைக் கண்டவிடத்தஞ்சுவது. மடமென்பது கொளுத்தக்கொண்டு கொண்டது விடாமை. நாணமென்பது இயல்பாயதொரு தன்மை. பயிர்ப்பென்பது பயிலாத பொருட்கண் அருவருத்தல்.

மேலும் வள்ளுவர்
**"பெண்ணிற் பெருந்தக்க யாவுள
கற்பென்னுந்
திண்மை யுண்டாகப் பெறின்"**
என்றார்.

பரஞ்சோதியாரும் மங்கையர்க்கரசியாரைக் குறிக்கும் ஞான்று
"கற்பலர் கொடியன்னாரும்"
என்று குறிப்பிட்டுள்ளார்.

பதிற்றுப் பத்திலும் **"ஆன்றோள் கணவ"** என்று சேர அரசனைக் குறிப்பிட்டதற்குக் **'கற்புடையவளுக்குத் தலைவ'** என்று உரைகூறியுள்ளார்.

எனவே "கற்பு" என்பது மகளிருடைய தலைசிறந்த குணமென்பது போதரும். கற்பு என்பது கற்பித்தபடி ஒழுகல் என்று பொருள்படும். பெற்றோர், கணவன், சான்றோர் முதலானவர்கள் கற்பித்தவாறு ஒழுகுதலே கற்பெனப்படும்.

இனி மகளிர் தன்மையை நோக்குவோமாயின் உதாரணமாக ஒரு யாழை எடுத்துக்கொண்டால் அவ்வியாழின் ஒரு நரம்பு அறுபட்டாலும் தான் தொழிற்படாது பிறருக்கும் இன்பம் பயக்கா. அதுபோலவே மங்கையரும் அவர்களுடைய மேற்கூறிய இலக்கணத்தில் வழுவுவார்களானால் நன்முறையில் அவர்கள் இயங்கி இன்பமளிக்க முடியாது.

இதனால்தான் அவர்களை வழக்கில் "லட்சுமி யனையாள்" என்றும், "திருவாட்டி" என்றும் செய்யுளில் "செய்ய தாமரைமேல் திருவோடொப்பாள்" என்றும் கூறுகின்றனர் போலும். இதிலோர் உண்மை காணலாம். திரு என்பதற்குச் செல்வம் எனப்பொருள்கொண்டு செல்வமனையாள் என்று கூறலாம். ஒருவனைச் செல்வம் வந்துற்ற காலை அவனுடைய வலி அதிகமாகும்.

சுற்றத்தினரும் பற்றுடனுதுஒழுகுவர். எடுத்த காரியம் கைகூடும். மேன்மேலும் அவனுக்கு இன்பமே யுண்டாகும். அதுபோலவே சிறந்த இலக்கணமமைந்த மங்கை ஒருவனை வந்தடைந்த ஞான்று அவனுக்கு வேறு எண்ணுவ தொன்றிலதன்றோ? அதனால்தான் வள்ளுவரும் "மங்கலமென்பமனைமாட்சி" என்று கூறியுள்ளார்.

அவர்கள் தனக்குத் தானே பயன் கொள்ளுமாற்றை நோக்குங்கால் கோல் கோடிய மன்னன் நாட்டில் மக்கள் குற்றம் புரிவதாக் கொள்வோம். அவன் வேறு தண்டனை

யும் விதியாது, அபராதம் போடாது அனைத்தினுக்கும் கொலைத்தண்டமே விதிக்கிறான். உடனே மக்கள் எதிர்த்து அரசனையே கொலை புரிகின்றனர். அதுபோலவே மங்கையரும் தம் இலக்கணத்திலிருந்து நாடறிய வழுவினர்களானால் அவர்கள் உயிர் நீப்பதை யாம் கண்கூடாகக் கண்டதொன்றாகும். ஆகவே பெண்மை நலம் மிக இன்றியமையாதது.

சிலர் சந்தனமும், முத்தும், இசையும் முறையே மலையிலும், கடலிலும், யாழிலும் பிறந்தாலும் அநுபவிக்கின்றவர்களுக்கே பயன் தருவதால் அதுபோல மங்கையரும் பிறருக்கே இன்பமளிப்பவர்கள் என்பர். உண்மை; அப்பொருள்களை யுடைமையால்தான் மலையும், கடலும்,யாழும் சிறப்படைகிறது என்பதை நினைக்க வேண்டியதே. எனவே இளமையில் இருக்கின்ற இடத்தில் சிறப்பும் பின் போகின்ற இடத்தில் சிறப்புமாக எவ்வாற்றானும் சிறப்பேயடையும் மங்கையர் கடமையும் சிறந்ததே.

சிவ மியங்கச் சக்தி எவ்வாறு மிக இன்றியமையாததாக இருக்கின்றதோ அதுபோலவே ஆண்மக்கள் தொழில் புரிந்து இருமை நலத்தையுமடைய பெண்மக்கள் மிக மிக இன்றியமையாதவர். அதையுணர்ந்து ஒவ்வொரு மகளும் தன்னைத் தான் காப்பாற்றுவது முதல் கடமையாகும்,

மேலும் தங்கள் நடைமுறையிலும் கடைப்பிடிக்க வேண்டும். ஒவ்வொருவரும் தாங்களே எடுத்துக்காட்டாக அமையவேண்டும். பேச்சு வல்லார் பேச்சும், எழுத்து வல்லார் எழுத்தும், கற்பிக்க வல்லார் கற்பித்தும் மக்களுக்கு உதவ வேண்டும். அட்டில் தொழில் வல்லார் அறுசுவையுண்டி சமைத்து உதவ வேண்டும். இடம், வலி, காலமறிந்து மங்கையர் கடமைகளைச் செய்வார்களாக!

தமிழ் வாழ்க!

★

"கோவை முரசு"

சூலூர் P. O. (கோவை ஜில்லா)

சந்தா விபரம்.

உள்நாடு தனிப்பிரதி	0—4—0	ஆண்டு சந்தா	ரூ. 3—0-0
வெளிநாடு ,,	0—5—0	,,	4-0—0

விளம்பரம்.

வெளி அட்டை ரூ.	100—0-0	உள் அட்டை	ரூ. 75—0—0
சாதா பக்கம் ரூ.	50—0—0	அரைப் பக்கம்	ரூ. 25—0—0

கதைப் பகுதி.

எதிர்பாராதது!

சு. வெ. நாராயணன்

பொழுது மேற்கே சாய்ந்து வானம் இருட்ட ஆரம்பித்துவிட்டது. பகல் பூராவும் சுற்றி அலைந்த களைப்பில் வீடு திரும்பிக்கொண்டிருந்தான் வீரன். அன்று எப்படியாவது வள்ளியைச் சந்தித்து இரண்டிலொன்று கேட்டுவிடுவது என்று முடிவாகத் தீர்மானித்திருந்தான். "பன்னாரிக் காட்டில் சுற்றி அலைந்து விறகு சேகரித்து ஊருக்குள் சென்று விற்று ஜீவனம் செய்வதைவிட வள்ளியைக் கூட்டிக்கொண்டு எங்காவது கண்காணாத சீமைக்கு ஓடிப்போய், கூலி வேலை செய்து பிழைப்பது மேல். இதற்கு வள்ளி சம்மதிப்பாளா? அவளுக்கு ஒரு கால்கட்டாக அவள் தாய் வேறே இருக்கிறாள். அதனால் வள்ளி சம்மதிப்பது கொஞ்சம் கஷ்டம். கட்டாயப்படுத்தினால் அவள் வந்துவிடுவாள், பார்க்கலாம்" என்று யோசனை செய்தபடியே வந்துகொண்டிருந்தான் வீரன். தலையில் அன்று சேகரித்த விறகு சுமை, கையில் ஊன்றிக்கொள்ள ஒரு பச்சை மூங்கில், நல்ல வாலிபப் பருவம், கட்டுமஸ்தான உடலமைப்பு, அதற்கேற்ற சலியாத உழைப்பும், உண்மை அன்பும் வள்ளியை அவன் மேல் காதல்கொள்ளச் செய்தது. அவனுக்கும் பன்னாரிக் காட்டுக் குறவர்களுக்கும் சிலகாலமாக மனஸ்தாபம். குறவர் பூராவும் ஒரு கட்சி. அவன் மட்டும் தன்னந்தனியாக அவர்களை எதிர்த்து நின்றான். குறவர்களைப் பகைத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு இல்லை. ஆனால் சந்தர்ப்பம் அவனை அவர்களுக்கு விரோதியாக்கிவிட்டது.

பன்னாரிக் காட்டில் வருஷத்துக்கொருமுறை காட்டிலாகா பெரிய துரை கேம்ப் செய்வார். துரையின் கேம்ப்புக்கு கூடாரம் அடித்துக் கொடுத்து, இன்னும் மற்ற வேலைகளைச் செய்யவேண்டிய ஆட்களை, குறவர்களின் பெரிய தனக்கார மூத்தான் கொடுப்பது வழக்கம். இன்னும் அவ்வப்போது சில்லறை வேலைகளுக்கெல்லாம் ஆட்களைக்கொடுத்து உதவுவான். இதற்கு பிரதியாகக் குறவர்கள் பன்னாரிக்காட்டில் விறகு எடுத்து விற்கவும், சில சமயம் வேட்டையாடிக்கொள்ளவும் அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். இது நெடுநாளைய வழக்கம். புதிதாக வரும் ரேஞ்சர் முதலிய எந்த அதிகாரியும் இதை மாற்றியதில்லை. யாராவது அதிகாரி வேட்டைக்குப்போவதானாலும் பெரியதனம் மூத்தானை அழைத்துப் போவது உண்டு. மூத்தானுக்குக் காட்டில் மிருகங்களின் நடமாட்டம் பூராவும் தெரியும்: அவனும் நல்ல வேட்டைக்காரன். மிருகங்கள் தண்ணீர் குடிக்கவரும் இடங்களில் ஒளிந்திருந்து அடிப்பதில் கெட்டிக்காரன். தான் அடித்த மிருகங்களின் தோல்களை அதிகாரிகளுக்குக் கொடுத்து அவர்களைத் தன் கைக்குள் வைத்திருந்தான். பொதுவாக அவனுக்கு குறவர்களிடமும், காட்டிலாகா அதிகாரிகளிடமும் நல்ல மதிப்பு உண்டு. குறவர்களுக்கு அவன் தலைவன் பெரியதனக்காரன். அதிகாரிகளுக்கு பன்னாரிக் காட்டைப் பொறுத்தவரை ஒரு ஏஜண்ட் மாதிரி. இது எல்லாம் மூன்று நான்கு வருஷங்களுக்கு முன்பு. இப்போது அவனுக்கு அதிகாரிகளிடம் அவ்வளவு சலுகை இல்லை. அவனுக்கு வயதாகி

விட்டது. இரவில் சரியாகக் கண் தெரிவதில்லை. குறியும் சரியாகப் பிடிப்பதில்லை. அதனல் ரேஞ்சர் அவனுக்குப் பதில் இளைஞனை வீரனை எடுத்துக்கொண்டார். வீர னும் முத்தானைப்போல நல்ல வேட் டைக்காரன். அவனது ஒழுக்கமும் பணிவும் ரேஞ்சருக்கு ரொம்பவும் பிடித்துவிட்டதால் முத்தானைப்பற்றி அவர் நினைப்பதே இல்லை. இதைக் கண்ட முத்தான் மனதில் பொருமை படரவாரம்பித்தது, காரணமற்ற விரோத மனப்பான்மையே வீரன் மேல் அவனுக்கு உண்டாயிருந்தது.

வள்ளி முத்தானுக்கு அக்காள் மகள். அவள் தகப்பன் இறந்து போனபின் முத்தான்வீட்டில் அவள் தாயுடன் வாழ்ந்து வந்தாள். அழ கும், குணமும் ஒருங்கே அமையப் பெற்று பன்னரிக் காட்டின் ராணி போல அவள் சுற்றித் திரிவாள். வீரனும் அவளும் சிறு வயது முதல் ஒன்றுப் வளர்ந்தவர்கள். பருவமும் பழக்கமும் அவர்களைக் காதல் கயிற் றில் இருகப் பிணைத்துவிட்டிருந்தது. முத்தானும் வள்ளியையும், தனது பெரியதனத்தையும் வீரனுக்குக் கொடுக்க வேண்டுமென்றிருந்தான். வள்ளியும் வீரனும் தடையின்றி நெருங்கியே பழகிவரவும் அவன் விட்டிருந்தான். வள்ளிக்காக வீரன் காட்டில் விறகு சேகரிப்பான். அவ ளுக்காக அவன் எதையும் செய்யத் தயங்கமாட்டான். வள்ளியும் புருஷ ஞகப் போகிறவன் என்ற உரிமை பாராட்டியே அவனிடம் நடந்துவந் தாள். ஆனல் வீரன்மேல் முத்தா னுக்கு ஏற்பட்ட பொருமை சும்மா விருக்கவில்லை. அவனை எப்படியா வது பன்னரிக் காட்டை விட்டுத் துரத்திவிட சமயம்பார்த்திருந்தான். முன்பெல்லாம் வள்ளியும் வீரனும் ஒன்ருகச் சேர்ந்திருப்பதை அவன் தடை செய்ததில்லை. அதைப் பார்த் து அவன் உள்ளூர ஆனந்தப் படு வான். அவனுடனிருப்பவர்களிடம் "இந்த ஜோடியைப் பாருங்கள். நம் குறவர்களுக் குள்ளேயே இப்படி ஜோடி அமையப் பெற்றதில்லை'' என்பான். ஆனல் அவனுக்கு வீரன் மேல் பொருமை ஏற்பட்டதிலிருந்து வள்ளியும் வீரனும் சேர்ந்து பழகு வதை அவன் ஆட்சேபித்தான். நாளாக நாளாக மனதில் உள்ள தீச்சுடரை வீரன் அறிந்துகொண்டு மிக ஜாக்கிரதையாகவே யிருந்து வந்தான். வள்ளியைக்கூட அவன் ரகசியமாகவே சந்தித்து வந்தான். இந்த நிலைமையினல் கொஞ்ச காலத் திற்கு முன்பே ஆகியிருக்கவேண்டிய அவர்கள் கல்யாணம் பேசுவாரற்று நின்றுபோய்விட்டது. ஆனல் வள் ளியும் வீரனும் ஒரே உறுதியுடனி ருந்தார்கள்.

காடு பூராவும் சுற்றிய களைப்பில் தலையில் விறகுச் சுமையுடன் வீரன் வருவதையானைப்பற்றத்துள்ளமேட் டில் நின்று கொண்டிருக்கும் வள் ளிக்குத் தெரிந்தது. அவனுக்காகத் தான் அவள் அந்நேரம் வரை காத் திருந்தாள். "வீரா'' என்று கூப் பிட்டாள் வள்ளி. ஆழ்ந்த யோசனை யில் சென்றுகொண்டிருந்த வீரனு க்கு அவள் கூப்பிட்டது சரியாக கேட்கவில்லை. நின்று திரும்பிப் பார்த்தான். பள்ளத்து மேட்டில் வள்ளி நின்றுகொண்டு இருப்பது அவனுக்குத் தெரிந்தது. விறகுச் சுமையைக் கீழே போட்டுவிட்டு அவள் அருகில்போய் உட்கார்ந் தான். களைத்து வாடிப்போன அவன் முகத்தை ஏங்கிய பார்வை யுடன் பார்த்தாள் வள்ளி. அவன் தோற்றம் அவளுக்கு வேதனையை யளித்தது. "இன்னும் நீ கஞ்சியே குடிக்கவில்லையே? இந்தா இதைக் குடி'' என்று கஞ்சிக் கலயத்தை அவன் முன் வைத்தாள். களைப்பி ஞல் வீரனல் பேசக்கூட முடிய வில்லை. கஞ்சியைக் குடித்த பின்பு தான் அவனுக்குத் தெம்பு வந்தது. சிரித்துக்கொண்டே "என்ன வள்ளி இந்த குறவர்களை மடக்கி உன்னை கல்யாணம் செய்துகொள்ள ஒரு

வழிதான் சொல்லேன்'' என்றான்.

"அடே அப்பா! நானா உனக்கு வழி சொல்லவேண்டும்? இந்த விளையாட்டெல்லாம் வேண்டாம். நம் கல்யாணத்தைப்பற்றி என்ன முடிவு செய்திருக்கிறாய் சொல்'' என்றாள் வள்ளி.

"முடிவு என்னவள்ளி? இரண்டே வழிகள்தான் உண்டு. ஆனால் நீ மட்டும் பெரியதனக்காரரை நிராகரித்துவரவேண்டும்."

"என் அம்மா வேறே இருக்கிறாளே வீரா! அவளைப் பற்றித்தான் எனக்கு வேதனையாயிருக்கிறது''

"அவளைப்பற்றி நீ கவலைப்படாதே வள்ளி. நான் சொல்வதைக் கேள். மனசை திடப்படுத்திக் கொள். நாம் எங்காவது போய்விடலாம்''

"இரண்டு வழி என்றாயே! அது என்ன?''

"அதுவா! யாருக்கும் தெரியாமல் இரண்டுபேரும் ஓடிப்போய் எங்காவது கூலி வேலை செய்தாவது பிழைத்துக் கொள்ளலாம். இல்லாவிட்டால் அடுத்த ஊருக்குப்போய் கிருஸ்துவவேதத்தில் சேர்ந்துகொள்ளலாம். பிறகு இந்தக் குறவர்களால் நம்மை ஒன்றும் செய்ய முடியாது."

"நல்ல யோசனை சொன்னாய்! கிருஸ்துவவேதத்தில் சேர்ந்துகொள்வதா? பிறகு நம் ஜாதி ஜனங்கள் நம் வீட்டில் தண்ணீர்கூட குடிக்க மாட்டார்களே! ஐயோ! உன் புத்தி ஏன் இப்படிப் போயிற்றோ?''

"பின் என்னதான் செய்வது? குறவர்களுக்கு என்னைக்கண்டாலே ஆகாதபோது நான் எப்படி இங்கேயே இருந்துகொண்டு உன்னைக் கல்யாணம் செய்துகொள்ள முடியும்? அவர்கள் சம்மதிப்பார்களா?''

"அதுதான் இல்லையே''

"பிறகு என்ன செய்யலாம் சொல்''

"இதோ பார் வீரா! கிருஸ்துவ வேதத்தில் சேர்ந்து நம் ஜாதி வழக்கத்தையெல்லாம் விட்டுவிட்டுஎல்லாருடனும் ஒன்றாகப் பழக என்னால் முடியாது. உனக்கும் நம்ம ரேஞ்சர் எஜமானுக்கும் நல்ல பழக்கமாயிற்றே. தூரத்தில் எங்காவது ஒரு வாட்சர் வேலை போட்டுக்கொடுக்கச் சொல்லிக்கேள். அவரும் போட்டுக் கொடுப்பார். பிறகு இரண்டுபேரும் போய்விடலாம்'' என்றாள் வள்ளி முடிவாக. அது அவனுக்கும் சரியான யோசனையாகப் பட்டது. 'ஆகட்டும்' என்று கூறி எழுந்து விறகு சுமையை எடுத்து தலையில் வைத்துக் கொண்டு வள்ளியுடன் வீடு நோக்கி நடந்தான்.

(அடுத்த இதழில் முடியும்)

★

ஏஜண்டுகள் தேவை.

ஒவ்வொரு ஊரிலும், செல்வாக்கும் திறமையும் உள்ள ஏஜண்டுகள் தேவை. இன்சூரன்ஸ் சேர்த்துக் கொடுக்க. தக்க கமிஷன் கொடுக்கப்படும். கார் வசதி உண்டு.

விபரங்களுக்கு:—

M. S. M. ஜுபிடர் டிரேடிங் கம்பெனி, லிமிடெட்,

ஈரோடு.

வேண்டியதைக் கொடுத்த வேந்தன்

"தூலூர் அம்பி"

மகதபுரியை மகேந்திரவர்மன் என்ற ஒரு அரசன் செங்கோல் செலுத்தி வந்தான். அவனிடம் ஏராளமான செல்வமிருந்ததால் ஏழைகளுக்கு இல்லையெனாது வேண்டியதைக் கொடுத்து உதவி வந்தான். தினந்தோறும் அநேக ஏழைகள் அரசனைக் கண்டு தங்களுக்கு வேண்டியதைப் பெற்றுக்கொண்டு சென்றனர்.

இப்படியிருக்கையில் அவ்வூரிலுள்ள செல்வர்கள் தாங்கள் இன்னும் அதிக செல்வம் சேர்க்கவேண்டும் என்ற எண்ணம் கொண்டு ஏழைகளைப்போல வேடமணிந்து அரசனைக் கண்டு வேண்டியதைப் பெற்று தங்கள் செல்வங்களைச் சேர்த்தனர். இப்படி அநேகர் அரசனிடமுள்ள பொருள்களை பெற்றுக்கொண்டதால் பொக்கிஷம் வெகு சீக்கிரத்தில் காலியாயிற்று.

ஒரு நாள் சில ஏழைகள் அரசனைக் கண்டு ஏதாவது உதவி செய்யும்படி வேண்டினர். அரசனிடம் பொருள் ஒன்றும் இல்லாமல் யாது செய்வதென்று எண்ணி திகைத்து நின்றான்.

கடைசியில் அவனுக்கு ஒரு எண்ணம் உதிக்கவே ஏழைகளை அழைத்து "ஐயோ, என்னிடம் ஒன்றும் இப்பொழுது இல்லையே. நல்ல வேளையாக என்னிடமுள்ள அதிகாரங்களை இதுவரை யாரும் கேட்கவில்லை. ஆகையால் உங்களுக்கு நியாயம் வழங்கும் அதிகாரத்தைக் கொடுக்கிறேன். அதில் கிடைக்கும் வருவாயை நீங்களே அடைவீர்கள்" என்று சொல்லிச் சென்றான்.

இதைக்கேட்ட செல்வர்களுக்கு "ஒன்றுக்குப் உதவாத இவ்வேழைகளா நமக்கு நியாயம் வழங்குவது" இதற்கு தகுந்த பரிகாரம் செய்யாவிட்டால் கெடுதிவரும் என்ற எண்ணம்கொண்டு அரசனிடம் விரைந்தோடி "அரசே, தங்களது அதிகாரத்தைக் கொடுக்கவேண்டாம், அவ்வேழைகளுக்கு தகுந்த உதவிகளை நாங்கள் செய்கிறோம்" என்று சொல்லி முறையிட்டனர். அரசனும் அதற்கு ஒப்புக்கொண்டான். ஏழைகளும் தங்களுக்கு வேண்டியதைப் பெற்றுச் சென்றனர். செல்வர்களும் இவ்விதம் அரசனை ஏமாற்றுது தாங்களும் ஏழைகளுக்கு உதவி செய்து வந்தனர்.

புயல்காற்று

மோட்டார் தொழிலாளியின் தொல்லை ஒழியுமா ?

-(புயல்)-

நாட்டில் பல்வேறு தொழிலாளர் ஸ்தாபனங்கள் இப்பொழுது வர்க்க ரீதியாகத் திரண்டு தங்கள் நங்களின் உரிமையைக் காக்கப் போராடுவதற்காக கச்சை கட்டி நிற்கும் காலமிது. அம்மாதிரி ஸ்தாபனங்களில் மோட்டார் தொழிலாளர் சங்கமும் ஒன்று. சென்ற சில திங்களாகச் செய்த ஓயாத உழைப்பின்பயனாய் இன்று சங்கம் ஓரளவு தன் காலில் நிற்கும் திறமை பெற்றிருக்கிறது. இரவு பகல் ஓயாது பல நூறு மைல்கள் காற்றிலும், மழையிலும், கடு வெயிலிலும், அலைந்து திரியும் தொழிலாளர்களில் முதன்மையானவர்கள் மோட்டார் தொழிலாளிகள் என்று கூறினல் மிகையாகாது. அவர்கள் பாடுபடுவதெல்லாம் உழைப்புக்கேற்ற ஊதியம் என்ற ஒரே குறிக்கோளுக்காகத்தான். பாடுபட்டும் பட்டினி என்ற இன்றைய நிலையொழிய வேண்டும். இதுதான் அவர்களின் லட்சியம். மோட்டார் தொழிலாளர்களுக்கு மாகாணம் பூராவிலும் பல கம்பெனிகளிலும் பல மாதிரியான சம்பளத் திட்டங்கள் இருப்பது வருந்தத் தக்கது. உதாரணமாக நமது ஜில்லாவையே எடுத்துக்கொள்ளலாம். கோவை நகரத்தில் மோட்டார் மன்னர் திரு. ஜி. டி. நாயுடு அவர்களின் நிர்வாகத்தில் நடைபெறும் U. M. S. கம்பெனியின் சம்பள விகிதத்தையும், மற்ற கம்பெனிகளின் சம்பள விகிதத்தையும் ஒப்பிட்டுப்பாருங்கள்.

U. M. S.

நடைமுறை வருடத்தில் 3 மாத சம்பளத்தை போனசாகக் கொடுத்துள்ளார். கொடுத்த துகை ரூ. 75000.

டிரைவர் உ. ச.	120—0—0	க. பேட்டா	தினம்	3—0—0
கண்டக்டர் உ. ச.	75—0—0	க. பேட்டா	,,	2—0—0
ஆ. டிரைவருக்கு	50—0—0	பி. பேட்டா	,,	1-12—0
கண்டக்டர்	30—0—0	பி. பேட்டா	,,	1—4—0

6 மாதத்தில் சம்பள உயர்வு ரூ. 7—8—0.

A. B. T. சர்வீஸ்.

டிரைவர் உ. ச.	63—8—0	கலெக்ஷன் பேட்டா	
கண்டக்டர்	47—0—0	,,	
செ. இன்ஸ்பெக்டர்	41—0—0		1—4—0
ஆரம்ப இன்ஸ்பெக்டர்	20×16		1—4—0
புதிய டிரைவர்	30×16		1—8—0
ஷி கண்டக்டர்	15×16		1—8—0

Stanes Bus Service.

புது டிரைவர்	56—0—0	பேட்டா	1—8—0
கண்டக்டர்	38—8—0	,,	1—4—0

M. C. S. சர்வீஸ்.

டிரைவர் உ. ச.	67—8—0	பேட்டா	1—8—0
கண்டக்டர்	27—8—0	,,	1—8—0
செ. இன்ஸ்பெக்டர்	27—8—0	பேட்டா	1—8—0
புது டிரைவர்	35—0—0	,,	

S. S. V. சர்வீஸ்

டிரைவர்	50—0—0	கலெக்ஷன் பேட்டா
கண்டக்டர்	25—0—0	,,

C. C. Brothers சர்வீஸ்

டிரைவர்	50—0—0	கலெக்ஷன் பேட்டா
கண்டக்டர்	25—0—0	,,

கோபால்டு சர்வீஸ்

டிரைவர் உ. ச.	75—0—0	கலெக்ஷன் பேட்டா
கண்டக்டர்	50—0—0	,,
பு. டிரைவர்	45—0—0	,,
கண்டக்டர்	32—8—0	,,

ஆஞ்சனேயர் சர்வீஸ்

டிரைவர் உ. ச.	55—0—0	கலெக்ஷன் பேட்டா	
கண்டக்டர்	32—0—0	,,	
பு. டிரைவர்	47—8—0	,,	
கண்டக்டர்	32—8—0	,,	
செ. இன்ஸ்பெக்டர்	32—0—0	,,	2—0—0

C. S. T Ltd

டிரைவர் உ. ச.	75—0—0	கலெக்ஷன் பேட்டா
பு. டிரைவர்	40—0—0	,,
பு. கண்டக்டர்	20×7½	,,

மேற்கண்ட புள்ளி விபரம் ஒப்பிட்டுப் பார்த்து எப்படி திரு. ஜி டி. நாயுடு அவர்கள் மாத்திரம் அதிக சம்பள விகிதம் கொடுக்கிறார்? மற்றவர்களுக்கு ஏன் முடிவதில்லை என்பதை வாசகர்கள் சிந்திக்கக் கோருகிறோம்.

நோய்க்கு மருந்து.

★ தோழன் ★

உடலை உடற்றும் நோய் போக்க மருந்து தேவை. அது மிகப் பழைய காலத்தில் கண்டு பிடிக்கப்பட்ட மருந்து. இது புதிய காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மருந்தென்பதல்ல இன்றைய நமது பிரச்னை. புதிய ரசாயனப்படி கண்டுபிடிக்கப்பட்ட போதிலும் சரி, பழைய பாஷாண முறைப்படி கண்டு பிடிக்கப்பட்ட போதிலும் மருந்து நோயைத் தீர்க்க வேண்டும். அதைத் தான் நோயாளி எதிர்பார்க்கிறான். அதுபோல காலமறிந்து கொடுக்கப்பட வேண்டிய மருந்தின் நோய் தீர்க்கும் தன்மையைப் பொருத்துத்தான் மருந்தின் மதிப்பை எடை போடவேண்டியிருக்கிறது.

அதுபோலத்தான் கோவை முரசு முன்னாள், அறிஞர்கள் ஆற்றிய அறவுரைகளை இன்று வெளியிடுவதால் பலர் தவறாக பத்தாம் பசலி, விஷயங்களைப் புதிப்பிக்கும் கோவை முரசு என நமது சஞ்சிகைக்கு யோசனைகூறுவதை தக்க ஆதாரத்துடன் மறுக்கிறோம். காலத்திற்கேற்ற கருத்துக்கள் ஒரு பொழுது வெளியிடப்பட்டிருந்தபோதிலும், அது இந் நாள் தேவை என உணருங்காலை அக்கருத்துக்களை வெளியிடாமலிருப்பது காலத்தையும், கடமையும் வஞ்சித்த அபத்துவத்திற்கு ஆளாவோம் என்பதை குறைகூறும் அறிஞர்களுக்கு மறுமுறையும் நினைவூட்டுகிறோம்.

American Digest போன்ற மேனாட்டுப் பத்திரிகைகள் பல சஞ்சிகைகளில் வெளிவந்துள்ள கட்டுரைகளையும், பிரசுரமான புத்தகங்களில் மிளிரும் சீரிய கற்பனைச்சொல் சித்திரங்களையும் கையாள்வதைக் கண்டிப்பார் அமெரிக்காவில் இல்லை. பல அறிஞர்களின் சீரிய கருத்துக்களின் சாராம்சமாக விளங்குகிறது கோவை முரசு எனத் துணிந்துகூற ஆசைப்படுகிறோம்.

நமது கோவை முரசு அறிவின் ஆலயமாக விளங்கும் கோவை முரசு போகின்ற பாதை புதிது, வைதீ புரியைக் கடந்து சமரச அறிவுக்கோட்டை வாயிலில் நுழைந்துகொண்டிருக்கிறது. கோவை முரசு எந்த அரசியல் கட்சியினருக்கும் எதிரியல்ல. ஆனால், திராவிடகழகத்தின் வீர மூச்சு ஆகும். "கோவை முரசு" கால் நடையிட்டாவது விரைவில் மாதமிருமுறையாகும் பின் வார இதழாக மலரும். ஆகவே வாசகர்களும், சந்தாதாரர்களும் ஆதரவு கொடுத்து எம்மை ஊக்குவிக்குமாறு வேண்டுகிறோம்.

தமிழ்நாடு வாழ்க. தமிழன் வாழ்க. தமிழ் வாழ்க.

புத்தக வானிலே ஓர் பொன்னொளித் தாரகை!

வீணர்களையும், தொழிலாளர்களை வஞ்சிக்கும் கொலைகாரர்களையும், சமூகத்துரோகிகளையும் ஒழித்துக்கட்டும் பணியை மேற்கொண்டு மாதந்தோறும் வெளிவரும்.

"வெடிகுண்டு"

(பதிப்பாசிரியர்:— பி. என். இராமாநுஜம்)

என்னும் மாதப்புத்தகத்திற்கு உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள்.

தனிப்படி 4 அணா. ஆண்டுச் சந்தா ரூ. 3—0—0.

விபரங்களுக்கு:— ஆராய்ச்சிப் பதிப்பகம்,
121, கடைவீதி, பொள்ளாச்சி. P.O.

கோவையிலே

உத்திரவாதமுள்ள வைரம், தங்க நகைகள்,
வெள்ளிப் பாத்திரங்களுக்கு
ஏற்ற இடம்

K. R. & Sons.,

JEWELLERS, BIG BAZAAR STREET,
COIMBATORE.

தென் இந்தியாவில் புகழ் பெற்றவை எங்கள்
நகைகள். ஒருமுறை விஜயம் செய்
யுங்கள். உண்மை விளங்கும்.

★

கே. ஆர். அண் சன்ஸ்,

பெரிய கடை வீதி, :: கோயமுத்தூர்.

பிரிட்டிஷ் செய்தி ஸ்தாபனத்தின் பொருளாதார செய்தி ஆபீசர்

தோழர் ஜே. ஏ. போரன் அவர்கட்கு அறிஞர் ஜி. டி. நாயுடு அவர்களுடைய வரவேற்பு.

கோயமுத்தூர்.

மே 28-ந்தேதியன்று மாலை 5-மணிக்கு பிரிட்டிஷ் செய்தி ஸ்தாபனத்தின் பொருளாதார செய்தி ஆபீசர் தோழர் ஜே. ஏ. போரன் அவர்கட்கு அறிஞர் ஜி. டி. நாயுடு அவர்கள் "கோபால் பாக்" என்னும் தமதில்லத்தில் ஓர் தேநீர் விருந்தளித்தார். அது சமயம், பத்திரிகையாளர், பிரபலஸ்தர்கள் கூடியிருந்த அக்கூட்டத்தில், மேல்நாட்டிலும், கீழ்நாட்டிலும் நடைபெற்றுவரும் பத்திரிகைத் தொழில்களின் தாரதம்மியத்தையும், இந்நாட்டிலே அரசாங்கத்தார் பொதுமக்கட்குத் தேவையும், பயனுமில்லாத முறையில் செய்தி ஸ்தாபனங்களை நடத்தி வருவதையும் குறித்து விளக்கமாக ஜி. டி. நாயுடு தமது வரவேற்புரையில் குறிப்பிட்டார்.

பின்னர் சொற்பொழிவு ஆற்றிய "கூட்டுறவு" ஆசிரியர் தோழர் என். லட்சுமணன் அவர்கள் தமது சொற்பொழிவில், மறைந்த நடராஜன் ('இந்தியன் சோஷியல் ரிபார்மர்' ஆசிரியர்) அவர்களுடைய திறத்தையும், குணாதிசயங்களையும் எடுத்துச் சொன்னார். ஆங்கில மொழியைக் கைவிட்டுவிடவேண்டுமென்ற கிளர்ச்சியைக்க கண்டித்தும், ஆங்கில பாஷையைக் கைவிட்டு விடலாகாதென்று தாம் கூறும்போது தமிழ் மொழியில் தமக்கு அன்பில்லையென்றோ, அதன் வளர்ச்சியில் தமக்கு அக்கரையில்லை என்றோ கருதக்கூடாது என்றும், அறிவுப் பொக்கிஷமாகவும், உலக மொழியாகவும் ஆங்கிலம் இருக்கின்ற காரணத்தாலேதான் தாம் அம் மொழியைப் புறக்கணிக்கலாகாது என்று சொல்வதாகவும் பேசினார்.

தோழர் பி. ஆர். ராமகிருஷ்ணன் எம். எஸ். ஸி. அவர்கள் தாம் "நவ இந்தியா" என்ற தினப் பத்திரிகையைக் கோவையில் நடத்தத் தொடங்கியது சிறுவயதிலிருந்தே பத்திரிகைத் துறையில் தமக்கு ஆசை இருந்து வருகின்ற காரணத்தால் தான் என்றும், தாம் லண்டனில் மாணவனாயிருந்தபோதே மாணவர்கட்குப் பயன்படும்படியான ஒரு சஞ்சிகையை ஆரம்பித்து நடத்தியதாகவும் பேசினார்.

இறுதியாக வரவேற்புக்கு பதிலளிக்குமுகத்தான் தோழர் ஜே. ஏ. போரன் தெளிவாக சொற்பொழிவாற்றினார். "இந்தியப் பத்திரிகையாளருடன் நான் சண்டை செய்ய வேண்டுமென்று நாயுடு அவர்கள் முயற்சி செய்கிறார்" என்று அவர் சொன்னபோது சபையில் சிரிப்பு தோன்றியது. "மெஷின்களிலும், கைத்தொழில் துறையிலும் மட்டுமல்லாமல், ஜி. டி. நாயுடு அவர்கள் விவசாயத் துறையிலும் ஆராய்ச்சி செய்து வருவதையறிய நான் மகிழ்கிறேன். தென் இந்தியா இன்று இருக்கும் நிலையில் அவருடைய விவசாய ஆராய்ச்சி மிகுதியும் பயன்படும் என்று நம்புகிறேன், கோயமுத்தூர் இந்த நாட்டிலே இவ்வளவு தூரம் பிரசித்தியடைந்திருப்பதற்கு சரி பாதி காரணம் தோழர் ஜி. டி. நாயுடு அவர்களே என்று சொல்லுதல் மிகையாகாது." என்று ஆங்கில நாட்டு அறிஞர் கோவை அறிஞர் அவர்களைப்பற்றிச் சொன்னபோழ்து சபையில் கரகோஷம் நிலவியது.

தோழர் சி. எம். ராமச்சந்திரன் செட்டியார் அவர்கள் நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

அபிமன்யு — ஓர் விமர்சனம்

வெளியிட்டவர் :	ஜுபிடர் பிக்சர்ஸ்
கலை நுணுக்க அறிஞர்கள்	W. R. சுப்பாராவ் A. கோவிந்தசாமி A. சுந்தரராஜ் A. காசிலிங்கம் முகுந்த குமார் கணபதி சவுத்ரி
கதை :	A. S. A. சாமி
வசனம் :	மு. கருணாநிதி (எனக் கேள்வி)
பாடல் :	பலர்?
டைரக்டர் :	M. சோமசுந்தரம் A. காசிலிங்கம்

நடிகர்கள்.

S. M. குமரேசன், முஸ்தபா, நம்பியார், சுப்பையா
U. R. ஜீவரத்னம், சந்தானலக்ஷ்மி முதலியோர்

"அபிமன்யு" திரையுலகத்திற்கேற்றாற்போல புராணக் கதையை தற்காலத்திற்கொப்ப மாற்றியமைத்தமை குறித்து மகிழ்வெய்த வேண்டியதே.

இங்கு குறிப்பாக முதன்முதல் ரசிகர்கள் நினைவுக்கு கொண்டுவர வேண்டிய பகுதியொன்று. எவரோ வசனமெழுதிக் கொடுக்க அதைத் தனதென்று நாணமில்லாமல்கூறும் அறிஞர்கள் (?) இன்று திரையுலகத்தில் நடமாடுகின்றனர். இப்போலிக் குழாங்கள் மலிந்துள்ளவரை உண்மைக் கலை வளர்ச்சியடைய மார்க்கமில்லை. அது நிற்க.

கதையின் முற்பகுதியில் விறுவிறுப்பு (Tempo) கிஞ்சிற்றேனும் கிடையாது. கதையின் பிற்பகுதி விறுவிறுப்புடன் செல்கிறது.

தோழியர் M. S. பாக்கியத்திற்கு அவ்வளவு நீண்டபகுதியை ஆதியில் அனாவசியமாக அளித்தது தவறு. படம் பார்க்கும் ரசிகர்கள் உள்ளத்தையும் "சப்பென" ஆக்குவதற்கு அதுவே காரணமாகும்.

சகுனியின் நடிப்பும், அபிமன்யுவின் பேச்சும், துரியோதனனின் கம்பீரத் தோற்றமும் படத்தை சோபிக்கச் செய்கிறது. ஜீவரத்னம் திறமையாகத்தான் நடிக்கிறார். ஆனால், அழுகின்ற யிடத்தில் சிரிக்கிறாரா அல்லது அழுகிறாரா என்பதை ரசிகர்கள்தான் முடிவு கட்டவேண்டும். சந்தானலக்ஷ்மியை இன்னும் சல்

லாபக் குமாரியென பட முதலாளிகள் நினைப்பது எதன் பொருட்டோ?

இருப்பினும் சில நவீன கருத்துக்களைக் கதையில் சேர்த்திருப்பதாலும் பெரும்பாலும் நடிகர்களின் (நடிகைகளாலல்ல!) திறமையாலும் டைரக்டர்களின் முயற்சியாலும் இப்படம் ஓரளவுக்கு வெற்றிபெற்றதெனக் கூறலாம்.

காந்தியார் நிதிக்கு
மில் முதலாளிகள் நன்கொடை நேரு கையில்
ரூ. 10 லட்சம் கொடுத்தனர்

கோவை ஜூன் 3.

தென்னிந்திய மில் முதலாளிகள் சங்கத்திலிருந்து காந்தி தேசிய நினைவு நிதிக்கு நன்கொடையாக, மத்திய சர்க்கார் பிரதமர் நேரு அவர்களிடம் கோவைக்கு விஜயம் செய்தபோது பத்து லட்சத்து ஒரு ரூபாய்க்கு ஒரு செக் கொடுக்கப்பட்டது. இப்பணமானது கோவை மாவட்ட தொழிலாளர்களின் நலனுக்குரிய நிர்மாண வேலைக்குப் பயன்படுமாம்.

கோவை நகர சபை நேருவுக்கு ஒரு வரவேற்பும் தந்தது.

கோவைச் செய்திகள்

உயர்திரு. K. வெங்கிடசாமி நாயுடு B. A. B. L. அவர்கள் சென்னை செனட் சபைக்கு, கோவை ஜில்லா முனிசிபல் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

★

பிறப்பு.

கோவை, தோழர் எஸ். கஜேந்திரன் B. A. அவர்கள் வாழ்க்கைத் துணைவியாருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்துள்ளது. தாயும் சேயும் நலம். அப்பெண் மகவுக்கு "கலாவதி" என பெயர் சூட்டப் பெற்றுள்ளது.

★

வாசகசாலை கல் நாட்டு விழா

விஜயமங்கலம்.

25—4—48 தேதி ஈரோடு டெப்டி கலெக்டர் திரு. P. V. நாராயணசாமி செட்டியார் அவர்கள் தலைமையில் வெகு சிறப்பாக கல்நாட்டு விழா நடைபெற்றது. தலைவர் தம் சொற்பொழிவில், கிராம மக்கள் முன்னேற்றம் அடையவேண்டுமானால் இதுபோன்ற வாசகசாலை, ஒவ்வோர் கிராமத்திலும் ஏற்படவேண்டும். அப்போதுதான் மக்கள், கல்வி அறிவு பெற்று, சிறந்த முறையில் தம் வாழ்க்கை நடத்துவார்கள் எனக் கூறி முடித்தார்.

மற்றும் பல அதிகாரிகள் விஜயம் செய்திருந்தார்கள். விஜயமங்கலம் திரு. V. R வெங்கிடாசல முதலியார் அவர்கள், யாவரையும் வரவேற்று சிறந்தமுறையில் சிற்றுண்டி வழங்கி வந்தனம் கூறி வழியனுப்பிவைத்தார்.

★

மாகாண திராவிடர் கழக மாநாடு

தூத்துக்குடியில் 8, 9 தேதிகளில் சிறப்பாக நடைபெற்றது.

தலைவர் பெரியார் அவர்கள். திறப்பாளர், T. P. வேதாசலம், கொடியேற்றுவிழா, K. K. நீலமேகம், மற்றும் S. குஞ்சிதம் குருசாமி, K. V. அழகிரிசாமி, A. P. ஜனார்த்தனம், S. R. சுப்பிரமணியம், மற்றும் பலர் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

பல லட்சக்கணக்கான மக்கள் குழுமியிருந்தனர்.

★

புது மனை புகு விழா

சூலூர், பிரபல செல்வவந்தரும், முன்னாள் திராவிடக் கழக உபதலைவருமாகிய உயர்திரு. S. K. கருப்பண்ணன் அவர்கள் புதிதாக கட்டப்

பட்ட புது மனை (பங்களா) புகு விழா 22—5—48தேதி சனிக்கிழமை வெகு விமரிசையாக நடைபெற்றது,

உள்ளூர் வெளியூர் முக்கிய பிரமுகர்கள் அதிகப்படியாக குழுமியிருந் தனர். அனைவருக்கும் சிறந்த முறையில் உணவளிக்கப்பட்டது. யாவரை யும் வரவேற்று உபசரித்தார். விழா இனிது முடிவுற்றது.

★

ஈரோடு தாலுக்கா ஆசிரியர் மகாநாட்டில் ஆசிரியர் *S. A.* மாணிக்கம் அவர்கள் சொற்பொழிவு

கொடுமுடி உயர்நிலைப் பள்ளியில் 25—4—48தேதி ஷை மாநாடு நடை பெற்றது. தலைவர் திரு. T. V. சொக்கப்பா M. A. L. T. தலைமையேற்று தலைமை சொற்பொழிவு நிகழ்த்தினர்.

ஆசிரியர் S. A. மாணிக்கம் அவர்களின் சொற்பொழிவின் சுருக்கம்:

தலைவர் அவர்களே! ஆசிரியத் தோழர்களே!! காலம் கடந்து வந்த மைக்கு வருந்துகிறேன். என்னை பேசவேண்டுமென விரும்பிய உங்கள் அனைவருக்கும் எனது அன்புகனிந்த வணக்கம் உரித்தாகுக.

என்னைப்பற்றி தலைவர் மிகப் பெருமைப்படுத்திக் கூறி அறிமுகப் படுத்தினர்கள். நான் அத்தனை புகழுரைக்கும் தகுதியுடையேன் அல்லேன். இருப்பினும் நீங்கள் என்பால் கொண்டுள்ள அன்பைக் காட்டுகிறது. நான் ஓர் ஆசிரியனுக இருந்தவன்தான். அதில் சகிக்கமுடியாத வேதனை தரும் விளைவுகளை பொறுக்கமுடியாமல் வெளியேறினேன். உங்கள் குறை கள், கஷ்டங்கள் நிலைமை, வாழ்க்கைத்தரம் யாவும் எனக்கு மற்றவர்களை விட நன்கு தெரியும். ஆகவே உங்கள் நிலை, வாழ்க்கைத்தரம் யாவும் புரட்சிகரமான மாறுதல் ஏற்படவேண்டும் என ஆசைப்படுகிறேன். அதற்கு ஆவன செய்துவருவேன். ஆனல், நீங்கள் ஒற்றுமை கட்டுப்பாடு உறுதியுடனின்று உழைக்கவேண்டும். அதுபோதுதான் உங்கள் நிலை உயரும். என்னுலான சேவையை பத்திரிகை மூலம் எப்போதும் செய்து வருவேன் எனக் கூறிக்கொண்டு இத்துடன் முடித்துக்கொள்கிறேன். எல்லோருக்கும் எனது வணக்கம்.

மற்றும் பலர் பேசினர். தலைவர் முடிவுரை கூற மாநாடு இனிது முடி வுற்றது.

எமது அடுத்த முரசில்

பாசவலை -- என்னும்

(ஆசிரியை S. P. மீனுக்ஷியம்மாள்)

தொடர்கதை துவக்கம்.

பங்கஜா மில்ஸ்,

லிமிடெட்.

(1932-A ரிஜிஸ்டர் செய்யப்பெற்றது.)

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் : கோயமுத்தூர்.

கோயமுத்தூரில், பேர்பெற்றமில்களின் வரிசையில்சேர்ந்த இம்மில் தக்க அநுபவஸ்தர்களால் நிர்வகிக்கப்படுகிறது

: ஸ்பின்னிங் :

80-நெ. வரை ரிங்கு நூல்

மற்றும் இதே இனத்தில்

டப்ளிங்கும் தயாரிக்கப்படுகிறது.

வருடந்தோறும் பங்குதாரர்கட்கு நல்ல வட்டி
தரப்பட்டு வந்துள்ளது

இந்திய முதல் இந்திய தொழிலாளர்
இந்திய நிர்வாகம்

ஆக எல்லாம் இந்திய மயமாக நடைபெற்று வருகின்ற
தேசிய தொழில் ஸ்தாபனமாகும்.

ஆதலால்

இந்த மில் நூலை அனைவரும் ஆதரியுங்கள்

Managing Agents and Secretaries:—

C. S. RATNASABHAPATHI MUDALIAR & SONS,

COIMBATORE.

ஸ்ரீ

யுனைடெட் இந்தியா லைப் அஷ்யூரன்ஸ்

கம்பெனி, லிமிடெட்.

ஸ்தாபிதம் : 1906] [தலைமை காரியாலயம் : சென்னை.

இந்தியாவிலுள்ள தலை சிறந்த அஷ்யூரன்ஸ் கம்பெனிகளில் யுனைடெட் இந்தியாவும் ஒன்று.

40 வருடங்களுக்கு மேல் தங்கள் பாலிஸிதாரர்களுக்கு நன்கு பணியாற்றி வரும் சிறந்த ஸ்தாபனம்,

1946-ம் வருஷத்திய கணக்குகளின்படி ரூ. *16,69,99,799* மேல் மதிப்புள்ள பாலிஸிகளுடைய கம்பெனி.

1946-ம் வருஷத்தில் மட்டும் ரூ. 3,89,60,222 மேல் மதிப்புள்ள பாலிஸிகள் வழங்கப்பட்டன.

1946-ம் வருஷத்தில் பிரிமிய வருமானம் மட்டும் ரூ. 90,00,350 மேல்.

இதுவரை ரூ. 1,33,57,382 மேல் பாலிஸிதாரர்களுக்கு, அவர்கள் பாலிஸிகள் காலாவதியாகியும், அல்லது அவர்களுக்கு மரணமேற்பட்டும், கணக்குகள் தீர்க்கப்பட்டு, பணம் வழங்கப்பட்டுள்ளது.

மேலே கூறியுள்ள விபரங்கள் கம்பெனியின் நிரந்தரத்தைப் பற்றி நன்கு விளக்கும்.

அநுபவமும், திறமையும் வாய்ந்த ஏஜண்டுகளுக்கு தகுந்த ஊதியம் கொடுக்கப்படும். விபரங்களுக்கு எழுதவும்.

கோவை கிளை காரியாலயம்.

5/34, அவனுசி ரோடு, :: கோயமுத்தூர்.

ஜெய் ஹிந்த்!

நம் நாட்டுக் கைத்தொழிலையே ஆதரியுங்கள்

அம்பிகா இன்ஜினீரிங் :: :: கம்பெனி லிமிடெட்

முத்துக்கவுண்டன்புதூர் P. O.

(வயா) திருப்பூர்.

(சூலூர் ரயிலவே ஸ்டேஷனுக்கு எதிர்புரம்)

3, 5, 7½, 10 குதிரை பவர் எலக்டிரிக் மோட்டார்களும் 2" முதல் 4" வரை உள்ள பம்புகளும் இன்னும் இதர மெஷினரி சாமான்களும் உற்பத்தி செய்கிறோம். நீண்ட காலம் திருப்திகரமாக உழைக்கும் உறுதிப்பாடும் வேலைப்பாடும் அமைந்த பம்ப் செட்டுகளுக்கு மேலேகண்ட விலாசத்திற்கு எழுதவும். ஒருடன் முதல் 2 டன்வரை காஸ்டிங்கும் எடுகப்படும். கரும்பு ஆலை (மாட்டில் ஓட்டக்கூடியதும் பவரில் ஓட்டக்கூடியதும் (ரோட்டரீஸ், ரயிஸ் அல்லர், மாவு மில்ஸ் முதலியவைகளின், ஸ்பேர்பார்ட்ஸ், ஜின்பார்ட்ஸ் முதலியன கிடைக்கும்.

மேனேஜிங் ஏஜண்ட்ஸ்,

K. P. கணபதி செட்டியார் & கம்பெனி, லிமிடெட்,

முத்துக்கவுண்டன்புதூர் P. O.

Edited & Published by S. P. Meenakshi Ammal, Sulur.
Printed by K. Ramanathan at Sri Kathiresan Press, Coimbatore.
Mg. Editor: S. A. Manickam.

நாமிருக்கும் நாடு நமதே!

வெட்டுக்களின் செய்தே தங்க
முதலாம், வேறுபல பொருளும்
குடைந்தெடுப்போம் எட்டுத்திசை
களும் சென்றிவை, விற்றே எண்ண
ரும் பொருள்களைகொண்டு வருவோம்.



நாங்கள் தயாரித்த

ஸ்பின்னிங் ப்ரேம்கள்

**தென்னிந்தியாவிலுள்ள பல மில்களிலும்
வட இந்திய மில்லுகளிலும் திருப்திகரமாக
உழைத்து வருகின்றன**

புது ஸ்பின்னிங் மில்லுகளுக்கு வேண்டிய
எல்லா மிஷின்களும் நாங்கள் சப்ளை செய்கிறோம்.

டெக்ஸ்டூல் கம்பெனி லிமிடெட்,

தபால் பெட்டி நெ 221. கோயமுத்தூர்.

சுவர்ண மாளிகை

★ ஒளி மிகுந்த ★

தங்க, வைர ஆபரணங்களுக்கு

P. A. ராஜா செட்டியார் & பிரதர்,

வைர வியாபாரம், கோயமுத்தூர்.

தி: ராஜா. போன்: 268.

கோவை ஸ்ரீ கதிரேசன் அச்சகத்தில் அச்சியற்றியது.